www.tamilarangam.net

# ஈழம்







நாம் ஈழவர் நமது மொழி தமிழ் நம் நாடு ஈழம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இன்னும் பொறுப்பதோ ?
## நாம் இனியும் பொறுப்பதோ ?

இன்னும் பொறுப்பதோ ? நாம் இனியும் பொறுப்பதோ ?
என்னென்னவோ நடக்கிறதே எமது மண்ணிலே !
எத்தனையோ மரணமங்கே ! எல்லாம் வீணிலே !
இன்னும் பொறுப்பதோ ? நாம் இனியும் பொறுப்பதோ ?...

பசியினலே துடிப்பவர்க்கும் குண்டடிதான் உணவு !
பகலுமில்லை இரவுமில்லை எந்நேரமும் இழவு !
கசிந்துவரும் கண்ணீருக்கும் தடைவிதித்தார் அங்கே !
கண்டபடி இனியும் சிந்த ஏது இரத்தம் இங்கே ?

—இன்னும் பொறுப்பதோ ?...

மனிதத் தலையைப் பிட்டுப்பிட்டு நட்டு வைப்பதால்
மரண விதை துவக்குகளாய் முளைக்கலானது !
சனியனை துவக்குங்கிரை யானவர் போக
சேர்ந்திடுவோம் மீதமுள்ளோர் துவக்கினை ஏந்த !

சீழ்பிடித்தச் சோவனிச மணத்தை மறைக்கவே
சிங்காரத் தேசீயம் ‘சென்டு’ தேடுது !
ஆழ்கடலில் அராஜகச் சுறு மேயுது !
ஆனவரை ஈழவரைத் தின்று தீர்க்குது !

—இன்னும் பொறுப்பதோ ?...

கொதிக்கும் வெயில் நேரத்திலும் இருட்டின் ஆட்சியே !
குடியேற்றக் கொடுமைகளால் பிளக்கும் இலங்கையே !
உதிப்பதற்கு வேறு சூரியன் எங்கும் இல்லையே !
உரிமைப் போரைத்தவிர வேறுவழியே இல்லையே !

அந்தநாடு இந்தநாடு எந்தநாடு உதவும் ?
அவரவர்க்குக் கோடிப் பிரச்சனை !—அதிலேதானே கவனம் ?
எந்தநாடும் எமது தியாகத்திறனைக் கொண்டுதானே
எமக்கு உதவக்கூடும் ! போரில் நாமே முந்தவேண்டும் !

—இன்னும் பொறுப்பதோ ?...

— ஈழநேசன் —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழம்

ஈழப்புரட்சி அமைப்பின்
வெளியீடு

●

மலர் 1: இதழ் 11

●

20—03—1985

●

அன்பளிப்பு : 2 ரூபாய்

●

அட்டை ஓவியம் :
தோழர் நேரு

●

வடிவமைப்பு :
ராஜா

●

தொடர்புக்கு :
ஈழம்
த. பெ. எண் : 2356
சென்னை - 600 024.

●

அச்சிட்டோர் :
தங்கம் பிரிண்டர்ஸ்,
சென்னை - 600 002.

# எதிரொலி

வரலாற்றின் விளைபொருளை வலிந்து பறித்தெடுக்கலாம் என்னும் முயற்சி காலநெடுகிலும் தோற்றுத்தான் போய் இருக்கிறது. வரலாறு எப்பொழுதும் தனது போக்குடன் இணைந்தவைகளை வெற்றியை நோக்கியே அழைத்துச் சென்றுள்ளது. ஈழவர்களின் சமூக அமைப்பிற்கேற்ப உருவாக்கம் பெற்ற இயக்கங்களை இணக்கம் ஏற்படுத்தும் முயற்சியில் வெளியில் இருந்தவாறே பலர் முயற்சித்தனர். சேர்க்கையான காரணங்களின் ஊடாக இயக்கங்களை நிர்ப்பந்தித்தனர். ஆனாலும் இவைகளை மீறி இயக்கங்களுக்குள்ளான செயற்பாட்டின் அடிப்படையில் மூன்று இயக்கங்கள் தமக்குள் இணக்கம் கண்டுள்ளன.

1984 ஏப்ரலில் சில அடிப்படைகளில் இணக்கம் கண்ட தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), ஈழப் புரட்சி அமைப்பு (EROS), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) ஆகிய மூன்று இயக்கங்களும் ஏறத்தாழ பத்து மாதங்களின் பின் தமக்குள்ளான உறவை வலுப்படுத்தும் பொருட்டும் ஏனைய அணிகளை தம்முடன் இணைத்துக்கொள்ளும் பொருட்டும் ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ENLF) என்ற பொதுப் பெயரின்கீழ் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய ஈழச் சூழ்நிலை கொடுமைகளின் உச்சநிலையை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதை யாவரும் உணர்வர். கடந்த காலத்தில் இயக்கங்களின் செயல்பாடுகள் ஈழவர்களை நம்பிக்கையீனத்துக்கு உள்ளாக்கியுள்ளது. தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்பதுபோல் கருவிகள் ஏந்திய இயக்கங்களின் அராஜகத்தனங் கண்டு பீதியடைந்துள்ளனர். சிறிலங்கா இராணுவத்தின் துப்பாக்கிகளுக்கும் இயக்கங்களின் துப்பாக்கிகளுக்கும் இடையில் ஈழவர்கள் சிக்கித் தவிக்கின்றார்கள். உடமைகள் வேண்டாம் உயிர் வாழ்ந்தாலே போதும் என்று கடல்கடந்து அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்துகொண்டிருக்கிறார்கள். இந் நிலைமையில் மக்களை தடுத்து நிறுத்தி நம்பிக்கையூட்டத் தவறுவோமேயானால் ஈழப் போராட்டம் யாருக்கு என்ற கேள்விதான் மிஞ்சும்.

1975ம் ஆண்டு கால கட்டத்தில் இரண்டு அல்லது மூன்று இயக்கங்களே என்று காணப்பட்ட நிலைமை மாறி 198? யூலையின் பின் 28, 30, இயக்கங்கள் என்று உருவாக்கம் பெறத் தொடங்கின. இது ஈழப் போராட்டத்தின் ஆரோக்கிய மற்ற சூழ்நிலையை எமக்கு வெளிப்படுத்துகின்றது. இந் நிகழ்ச்சிகள் எம்மை தீவிர சிந்தனைக்கு உள்ளாக்கியது. சூழ்நிலை எம்மை இணைப்பை நோக்கி உந்தித் தள்ளியது. இவைகளின் பின்னணியில்தான் ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ENLF) மலர்ந்திருக்கின்றது. இதன் தோள்களில் பாரிய சுமை சுமத்தப்பட்டுள்ளது. இன்றைய இடிபாடுகளில் இருந்து மக்களை மீட்டெடுக்கவும், அவர்களை ஒழுங்கு படுத்தவும், போராட்ட முனைப்பை கூர்மைப்படுத்தி வெற்றிக்கு இட்டுச் செல்லவும் வேண்டியவர்களாய் ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ENLF) வரலாற்றினால் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

ஈழத் தேசிய விடுதலை முன்னணியை (ENLF) பலப்படுத்தவும் அதனை வளர்த்துச் செல்லவும் ஈரோஸ் தன்னுடைய முழுப்பங்களிப்பையும் செலுத்துமென்று உறுதி கூறுகின்றோம்.

www.tamilarangam.net

# நினைவுகளை செயல்களில் சுமப்போம்...



தோழன் சோமேஸ்வரன்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட எமது தோழன் சோமேஸ்வரன் (மோகன்) கடந்த 4-1-85 அன்று சிங்கள இராணுவத்தின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகி வீர மரணமானன்.

எல்லோராலும் 'சோமேஸ்' என அன்பாக அழைக்கப்பட்ட இவனது இழப்பு ஈழப் புரட்சிக்கு ஒரு பேரிழப்பாகும். கணேசன் அன்னலட்சுமி தம்பதியரின் மூத்தமகனுகப்பிறந்த இவன் யாழ் இந்துக்கல்லூரியில் உயர் படிப்பினைமுடித்துயாழ்பல்கலைக் கழக அனுமதி கிடைத்தவேளை ஈழவரின் அவலங்களை மனிதாபிமானநோக்கில் பார்வையிட்ட செயற்பாடுகளினுல் எமது இயக்கத்தின் முக்கியமான தோழனுக மக்களுக்கான தனது பங்களிப்புகளை வேகமாகவும் மிகுந்த ஈடுபாடுடனும் செய்துவந்தான். மாணவர் இளைஞர் பொதுமன்ற வேலைத்திட்டங்களை செவ்வனே மேற் கொண்டு வந்த எமது தோழன் சோமேஸ் அரசியல் ரீதியான வேலைத்திட்ட அணி வகுப்புக்கென வெளியிடப்பட்ட 'நாங்கள்' இதழின் ஆக்கங்களுக்கு முக்கியமான தனது பங்கை நல்கிவந்தான்.

இந்நேரத்தில் அவனதுபெரும் பங்கினுல் வெளிவந்த கட்டுரையை (நாங்கள்-1) ஈழத்தில் மறுமுறை பிரசுரிப்பதன் மூலம் எமது வீரவணக்கத்தை அவனுக்கு செலுத்துகிறேம்.

—ஈழப் புரட்சி அமைப்பு

தமிழ் பேசும் மக்கள் இனப்படுகொலைகளையும், தீச்சுவாலைகளையும், பலாத்காரங்களையும், பகிரங்கக் கொள்ளைகளையும் கண்டு கலங்கிப்போய் இருக்கும் இந் நிலையில் தம் எதிர்காலத்தை யிட்டு எதுவித தீர்க்கமான முடிவையும் எடுக்கமுடியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கிருர்கள். இத்தத்தளிப்பு இம்மக்களின் ஒரு சாரரான மாணவர், இளைஞரையும் பீடித்துக்கொள்ளாமல் எப்படி இருக்க முடியும்?

## அன்று முதல் இன்றுவரை

அந்நியரின் அசுரப்பிடிக்குள் தீவு அகப்பட்டுக் கொண்ட காலம் முதல், இன்றுவரை நாம் எந்தெந்த பிரச்சனைகளுள் சிக்கிக் கொண்டோம், எவ்வாறு வழி நடத்தப்பட்டோம் என்று பார்க்க வேண்டியது நமது முதல் கடமை.

ஆங்கிலேயரின் ஆட்சிக்காலங்களிலேயே இங்கு பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வந்தன. கல்வித்துறை, தொழில்துறை முதலான துறைகளில் பாரிய மாற்றங்கள் வந்தன. இவை ஆங்கிலேயபாணியில் சீரமைக்கப்பட்டன. இவர்கள் தமக்கு முண்டு கொடுத்துதவக் கூடிய பிரசைகள் உருவாகும் வகையிலேயே கல்விதொழில்துறைகளை ஆரம்பித்து வைத்தார்கள். ஆங்கிலக் கல்வியே அவசியமென்றுர்கள். தனக்கும் தனது நாட்டுக்கும் ஏற்ற தொழில் துறைக்குரிய படிப்பே மேன்மையானதெனப் போதித்தார்கள்.

ஆங்கிலேயரின் அடிச்சுவட்டை பின்பற்றி வந்த பேர்வழிகளே 1948க்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பைக்கைப்பற்றிக் கொண்டார்கள். ஆங்கிலேயர் காலத்து அடிமைவாழ்வைத் தொடர்ந்து போற்றிப் பராமரிக்க வந்தவர்களே இப்புதிய ஆட்சியாளர்கள் இவர்களின் அடிமைப் புத்தியுடன் கூடவே இன வெறியும் குடிபுகுந்திருந்தது. 48க்குப் பின்படிப்படியாக தமது இயல்புகளை நடைமுறைக்கு கொண்டுவர முனைந்தார்கள். ஆட்சியில் அமர்ந்தவுடனேயே தமிழ்ப்பேசும் மக்களில் ஒரு சாராரின் குடியுரிமையையும், வாக்குரிமையையும் பறித்து வாழும் உரிமைக்கே வேட்டு வைத்தார்கள். இதனுல் இம்மக்களின் இளைய சமுதாயம் கல்வியையும், தொழிலையும் முற்றுக இழந்து அவதிப்பட்டது. 56ல் தனிச் சிங்களச் சட்டத்தை அமுலாக்கி இன்னெரு சாராரையும் அடக்க முயன்றது. 71ல் தரப்படுத்தலை தீவிரமாக அறிமுகம் செய்து உயர்கல்விக்குத் தடைபோட்டது. இவையே தமிழ் பேசும் மாணவ இளைஞர்களை இனரீதியில் அடக்கி ஒடுக்குவதற்கு எடுத்த வெளிப்படையான தீர்மானங்கள்.

## தாக்கங்கள் எதிர்ப்புகள்!

இனவெறி அரசுகள் காலத்துக்குக் காலம் தாம் தீர்மானித்தவற்றை நடை முறைப்படுத்த முற்பட்ட வேளைகளிலெல்லாம் மாணவரும் இளைஞரும் தம் எதிர்ப்புக்களையும், ஆவேசத்தையும், தீவிரத்தையும் காட்டத் தவறவில்லை. ஆர்ப்பாட்டங்களாயும், ஊர்வலங்களாயும் வன்முறை நடவடிக்கைகளாயும் இவை உருவெடுத்தன. இவ் எதிர்ப்புகள் பிரபல்யம் பெற்றவையாயும், தாக்கத்தைத் தந்தவையாயும், மாற்றங்களுக்கு வழிவகுத்தவையாயும் விளங்கும் சில சம்பவங்களை இங்கு மீட்க வேண்டியது அவசியமானது.

60க்குப் பின் மாணவ இளைஞர்கள் தாமாகவே முன் வந்து காட்டிய எதிர்ப்புக்கள் பல. புத்தூரில் சிங்களப்பாடசாலை நிறுவுவதை தடுத்தனர். பாடசாலைகளில் சியவச சீட்டுக்கள் விற்பதை எதிர்த்தனர். தமிழ்ப் பல்கலைக் கழகத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாழ்ப் பாணத்தில் நிறுவாது திருமலையில் நிறுவுமாறு வற்புறுத்தினர். தரப்படுத்தலைக் கண்டித்து மாபெரும் ஊர்வலம் நடத்தினர். இவ்வளவுடன் நின்றுவிடாமல் தமது கோரிக்கைகளுக்கு குறுக்கே நின்றவர்கள்மீது வன்முறை நடவடிக்கைகளிலும் ஈடுபடத் தயங்கவில்லை.

இக்கால மாணவ இளைஞரின் தன்னியல்பான எழுச்சிப் போக்கு தமிழ் அரசியலிலும் பெரும் தாக்கங்களை விளைவித்திருந்தது, தமிழ்த்தலைவர்களுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்திருந்தது. தரப்படுத்தலாலும், தொழிற்புறக்கணிப்பாலும் பாதிப்புற்ற மாணவரினதும், இளைஞரினதும் மனக் குமுறல்களுக்கு முற்றாகச் செவிசாய்த்தனர். இப்பிரச்சனைகளே தமிழ்ப்பேசும் மக்கள் அனைவரையும் தழுவிய பிரச்சனைகள் என எண்ணிய தலைவர்கள் 76ல் ''தமிழீழக்'' கோரிக்கையைத் தீர்வாக முன்வைத்தனர். இது இந்த இளைஞர்களை உற்சாகப்படுததியதுடன் தீவிரமாகச் செயற்படவும் செய்தது. இளைஞர்கள். இளமைத்துடிப்புடன் தரப்படுத்தலையும், அரச வேலை வாய்ப்பின்மையையும் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளாகக் கருதிக் கொண்டு அனைத்து தமிழ்பேசும் மக்கள் பகுதிகளுள்ளும் வேரூன்ற முயன்றனர். ஆனால் பெரும்பாலான மக்களோ தமது அன்றாடப் பிரச்சனைகளுடன் சிறிதும் ஒட்டாத இந்த 'அடிப்படைப்' பிரச்சனைகளை இனங் கண்டு கொண்டனர். இதனால், இவர்களினால் இளைஞர் சக்திக்கு அனுதாபமும், ஆதரவும் கொடுக்கக் கூடியதாயிருந்ததே தவிர, அவர்களோடு இணைந்துகொள்ளக் கூடியதாகவிருக்கவில்லை. இதனால் மலையகம் கழன்று சென்றது. இஸ்லாமியர் நம்பிக்கை இழந்தனர். இதனால் இன்று வெளிப்பட்டுள்ள எந்த இயக்கமோ, கட்சியோ மக்களை ஒன்று திரட்டி போராட்டக் களத்திற்கு இட்டுச் செல்லும் ஆற்றல் அற்றவையாகவே தெரிகின்றன.

பெரும்பாலான தமிழ் பேசும் மக்களின் சமூகபொருளாதாரப் பிரச்சனைகளையும், இனவெறியர்களால் விளையும் குடியேற்றம் முதலான பாதிப்புக்களையும் முன்வைக்காது, செயற்படத் துடிக்கும் எந்த இயக்கமோ, கட்சியோ இம்மக்களை இணைத்துக்கொள்ள வாயக்கற்றதாகிவிடும்.

ஒரு இயக்கம் பாமர மக்களை ஒன்று திரட்டிச் செய்யும் போராட்டத்துக்கு மெருகூட்டக் கூடிய வகையில் மாணவ, இளைஞர்களின் செயற்பாடுகள் அமையப் பெறுவது அவசியம். இம்மக்களைச் சார்ந்த பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தேயாக வேண்டும். இளமையிலேயே படிப்பைவிட்டு கூலிகளாய், வேலைக்காரர்களாய், வாழும் இலட்சக்கணக்கான மலையக மாணவரினதும் இளைஞரினதும் இதய வேட்கைகள் எந்தவொரு அரசியல் அரங்கிலும் அம்பலமாகியதாயில்லை. இவர்களின் மனக்கொதிப்புகளை முக்கியப்படுத்தாமல் இவர்களிடம் தரப்படுத்தலையும், மொழித்திணிப்பையும் அரசாங்க வேலை வாய்ப்பின்மையையும் கூறிக் கொண்டு 'அணி திரட்டலைச் செய்ய முடியுமா? இவர்களைப் போராட வரும்படி அறைகூவ முடியுமா?

தமது எதிர்காலத்தை குருத்திலேயே கொய்துகொண்ட இத்தகைய மாணவ இளைஞர்களைச் சார்ந்தே 'நாங்கள்'' கருத்தைச் சொல்கிறோம். இவர்களைச் சூழ்ந்த பிரச்சனைகளை அரசியல் அரங்கில் அம்பலமாக்குவதுடன் அதற்கொத்த தீர்வையும் வெளியிடுவது மிக மிக அவசியம்.

MEDICAL UNIT FOR SERVICE OF TAMILS
.M.U.S.T.

## தமிழர்நல மருத்துவ அமைப்பு (M. U. S. T.)

144, Choolaimedu High Road
MADRAS - 600 094
Tamilnadu - India.

நமது மக்களுக்கு உதவுமுகமாக ஈழவிடுதலையை முன்னெடுக்கும் இயக்கங்களின் ஆதரவுடன் இவ் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### அமைப்பின் நோக்கங்கள்

1. இலங்கைத் தமிழ் மக்கள் அனைவருக்கும் பொதுவான மருத்துவ அமைப்பாக இருத்தல்.

2. உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ் மருத்துவர், நிபுணர்களினதும் தமிழர்களுக்கு உதவுவதாய் இருக்கும் ஏனைய மருத்துவ நிபுணர்களினதும் சரீரப் பங்களிப்பையும் ஆலோசனைகளையும் ஒருங்குதிரட்டி இலங்கைத் தமிழ் மக்களின் தேவைக்காகப் பயன்படுத்தல்.

3. உலகின் பல்வேறு பாகங்களிலும் இருந்து போசாக்கு உணவுப் பொருட்களைத் திரட்டித் துன்பப்படும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு வழங்கல்.

4. உலகின் எல்லாப் பாகங்களிலுமிருந்தும் உடைகளைத் திரட்டி அவசியப்படும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு விநியோகித்தல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடாப்பிடியாக திடீர் தாக்குதலில் ஈடுபடும் இளைஞர்கள் இம்மக்களை இராணுவத் தாக்குதல்கள் மூலம் அணிதிரட்ட முயற்சிக்கிறார்கள். இதன் விளைவோ வேறுபாடாக இருக்கிறது. 13 இராணுவவீரர்கள் பலியாகும்போது மக்களில் 40 பேர் கொலையுண்டனர். 15 இராணுவவீரர்கள் தாக்கப்பட்டபோது 200 பேர் அழிக்கப்பட்டனர். இவர்கள் விரும்புவதுபோல் விவசாயிகளும் தொழிலாளர்களும் அணி திரளவில்லை. செம்மணிச் சுடலையில்தான் குற்றுயிருடன் கொளுத்தப்படுகிறார்கள். இராணுவத் தாக்குதல் மேலும் தொடர்ந்தால் மக்களின் அழிவு இன்னும் பன்மடங்காகும். இதுமக்களை ஆயுதப் போராட்டத்தில் மனங்கொள்வதை விடுத்து இந்தியக் கரைகளுக்கு அகதிகளாகவரவே வழிவிடும். இதற்கான முன்னோடி நடவடிக்கைகள் இன்றே ஆரம்பமாகி இருப்பதை அவதானிக்க வேண்டும். இஸ்ரேலின் கொடுமைகளைக் கண்டு அஞ்சி அயல் நாடுகளுக்கு ஆரம்பத்தில் உயர் வகுப்பினர் ஓடினர். இதுபோலவே இன்று இலங்கையிலிருந்தும் இந்தியாவிற்கு உயர் வகுப்பினர் பலர் இடம் பெயர்ந்துவிட்டனர். இனிவரும் காலங்களில் சாதாரண மக்களும் குடும்பங்களோடு கொடுமை தாங்கமுடியாமல் கடல் கடக்கவும் கூடும்.

*(15.84 ஈழம் இதழிலிருந்து....)*

# அகதிகள் வெளியேற்றம் தொடரலாமா?

மன்னார்ப்பகுதியில் அமைந்துள்ள அடம்பனில் இம்மாதம் நான்கு சிங்களவர் கொலை செய்யப்பட்டிருந்தனர். 'இவர்களில் இருவர் ஆண்கள் மற்றவர்கள் பெண்கள். இந்தச் செயலைச் செய்துவிட்டு சில இளைஞர்கள் ஆயுதங்கள் சகிதம் இராணுவத்தினரின் வருகைக்காக காத்திருந்தனர். சிங்களவர்களைக் கொன்றதும் அவ்விடம் வெறிகொண்டு ஓடிவரும் இராணுவத்தின் மீது பலத்த தாக்குதல் ஒன்றை நிகழ்த்தலாமென இவர்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் இவர்களின் நினைப்புக்கு மாறாக இராணுவம் வேறு கிராமங்களில் ஊடுருவி அப்பாவி மக்களைச் சுட்டுக் கொல்லத் தொடங்கியது அனுராதபுரத்திலிருந்து சுமார் 500 இராணுவத்தினர் வந்த குவிந்து வட்டக்கண்டல், காத்தான்குளம் ஆலங்குளம். கல்லியடைஞ்சான், பருப்புக்கடந்தான், உயிலங்குளம் ஆகிய கிராமங்களில் 150 பேர் கொண்ட குழுக்களாக பிரிந்து கண்களில் எதிர்ப்பட்ட உயிரினங்களையெல்லாம் சுட ஆரம்பித்தார்கள். சீருடை தரித்த இந்த வெறி கொண்ட கும்பல் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை துப்பாக்கிக் கூரினால் குத்தியும், பெண்களை கோரமாகக் கற்பழித்தும், வீடுகளை கொள்ளையடித்து தீவைத்தும், ஆடுமாடுகளையும், கோழிகளையும் கூட ஒன்று விடாமல் அழித்தும் வெறியாடியது. பௌத்த வெறிகொண்ட இந்தக் காடையர் ஆலங்குளத்திலுள்ள ஒருகுடும்பத்தில்கணவனின் கண்களில் கொழுக்கியினால் குத்தி கயிற்றினில் தொங்கச் செய்து விட்டு மனைவியை மோசமாக கற்பழித்துக் கொலை செய்திருப்பது இவர்களின் ஈனச்செயலை எடுத்துக் காட்டும் ஒருசம்பவமாகும். இந்த அட்டூழியத்திற்குப் பலியாகி மாண்டவர்கள் 300 பேர்வரை இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் கிலி கொண்ட மன்னார் பகுதி மக்கள் வள்ளங்களிலும், படகுகளிலும் குடும்பகளாகஏறிஇராமேஸ்வரத்திற்கு தப்பி ஓடிக் கொண்டிருக்கின்றனர். பேசாலையில் தயானந் என்ற சாராயவியாபாரியை கொலை செய்யவென சில இளைஞர்கள் ஆயுதங்களுடன் வந்து செய்த குழப்பங்களைக் கண்டு இப்பகுதி மக்கள் மேலும் பீதியுற்று வெகுவேகமாக தமது இருப்பிடங்களை விட்டு ஓடிக் கொண்டிருக்கின்றனர். இங்கிருந்து சென்றவர்கள் மட்டும் தற்போது 2000ம் பேருக்கும் அதிகமாக இருக்கிறது. இம்மக்கள் தற்போது பசியோடும், சோர்வோடும் மண்டபம் முகாமில் குவிந்திருக்கிறார்கள். இது மட்டுமல்லாது கடந்த ஆண்டில் வல்வெட்டித்துறை, மாதகல் பகுதிகளில் நடைபெற்ற இராணுவ கெடுபிடிகளுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் பலர் இந்தியாவின் வேதாரணியம் கரைக்கு அகதிளாககடல்கடந்தவண்ணமிருக்கிறார்கள். ஒரு நாளைக்கு சராசரியாக 5-10 குடும்பங்கள் இப்படியே சென்று கொண்டிருக்கிறார்கள்.

இவை தவிர முல்லைத்தீவு, திருகோணமலை பகுதிகளில் வாழ்ந்த சாதாரண மக்களுக்கும் அவர்களது வாழ்க்கை அகதிகள் முகாம் வாழ்வாக மாறிவிட்டது. சுமார் ஒரு இலட்சம் பேர் வரை தமது மண்ணை இழந்து அனாதரவாக இருக்கிறார்கள்.

சொந்த மண்ணிலேயே அனாதைகள் ஆவதும் தஞ்சம் கோரி கடல் கடப்பதுமான இந்த அவலம் இன்று நேற்று எமக்கு ஏற்பட்ட ஒன்றல்ல இது 1964ம் ஆண்டிலிருந்தே ஆரம்பித்துவிட்டது.சிறிமா, சாஸ்திரி ஒப்பந்தமூடாக நாடற்றவராக்கப்பட்ட மலையகத்தமிழரில் 5 இலட்சம் பேர் இந்தியாவிற்கு விரட்டியடிக்கப்பட்டனர். பின் 1970 களில் வந்த தரப்படுத்தல் சட்டம் கல்வி வேட்கை கொண்ட இளைஞர்களை இங்கிலாந்து முதலான மேற்கத் தேய நாடுகளுக்கு இடம் பெயரவைத்தது. இதனூடாக வெளியேறிவர்கள் 40,000



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(1964ல் நாடற்றவராக்கப்பட்டோர்)

பேரென மதிப்பிடப்பட்டிருக்கிறது. 1978 இற்குபின் 'தொழில் வாய்ப்பு' என்ற மாயையினூடாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு துரத்தப்பட்டு அங்கு அரசியல் தஞ்சம் கோரி அவதிப்படுவோர் 75,000 பேராக இருக்கிறது. அந்த வரிசையிலே 1983 முதல் ஈழத்திலிருந்து தமிழகத்திற்கு அகதிகளாக வந்துள்ள 60,000 தமிழர்களின் வரவும் அமைந்துள்ளது.

''இது ஒரு பௌத்த சிங்கள நாடு'' என்ற இறுமாப்புடன் இங்கு தமிழர்கள் எவருமே இருக்கக் கூடாதென்ற ஒரே நோக்குடன் எடுக்கப்பட்டு வந்த தொடர் நடவடிக்கைகளின் விளைவுகளே இவை. ஆரம்பத்தில் தமிழ் பேசுவோர் அனைவரையும் ''கள்ளத் தோணி'' அல்லது, ''மரக்கலயா'' என்றும், பின்னர் மலையக மக்களை ''இந்தியாக்காரன்'' என்றும் தற்போது வடபகுதியினரை ''பயங்கரவாதிகள்'' என்றும் அடையாளங் காட்டுவது 'இவர்கள் வேற்று நாட்டவர்கள், நாட்டை விட்டே விரட்டப்பட வேண்டியவர்கள்' என்ற அர்த்தத்தையே உணர்த்துகின்றன.

## குடியேற்றங்கள்

தமிழ் தேசிய இனத்தை இவ்விதம் அழித்து அகற்ற தனது இராணுவப்பலத்தையும் வலிந்த சிங்களக் குடியேற்றங்களையும் படிப்படியாக அரசாங்கம் அதிகரித்து வருகிறது. கடந்த மாதச் செய்திகள் ஜயவர்தனவின் மிருகத்தனமான இந்தப்போக்குகளுக்கு மேலும் பல எடுத்துக் காட்டுகளைத் தருகின்றன. மலேசியாவில் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சியை அவர்கள் அடக்கிய விதத்தை பின்பற்றி ஈழத்தின் வடபகுதியில் 30,000 சிங்கள காடையர்களை ஆயுதங்களுடன் குடியமர்த்தப் போவதாக அத்துலத் முதலி அறிவித்திருப்பதும், பிரித்தானியாவிலிருந்து நவீன விசைப்படகுகளை கொண்டுவர இருப்பதும், திருவனந்தபுரத்தில் தரித்துச் சென்ற விமானத்தில் 15,000 கிலோ கிராம் ஆயுதங்கள் இருந்ததையும் கவனித்துப்பார்த்தால் அரசாங்கத்தின் இராணுவ மயமாக்கலின் தோற்றத்தைக் காணலாம்.

படைப்பலத்தை அதிகரித்து அதை ஒருமுகப்பட்ட அமைப்பு வடிவம் கொடுப்பதற்கு தற்போது ஜயவர்தனவால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. ஜயவர்தன தலைமையில் பாதுகாப்புத்திட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பது அரசியல் நிருவாகத்தை இராணுவ நிர்வாகமாக மாற்ற எத்தனிக்கும் முயற்சியின் அறிகுறியாகவே தென்படுகிறது. ''இது சிங்களவர் தொடுக்கும் யுத்தம்'' என ஜயவர்தன பேசிவருவதற்கும் இந்தக்குழு அமைப்பிற்கும் நெருங்கிய இணைப்பு உண்டு.

இவ்வாறு இராணுவத்தை அமைப்பு ரீதியாகவும் ஆயுதரீதியாகவும் பலமூட்டி வரும்போது தனது ஸ்திரப் பாட்டிற்கு கால அவகாசம் தேவையாகும்போது ''தமிழ் மக்கள் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு தரப்போவதாக வேடம் போடுவதை கடந்த காலங்கள் எமக்கு அனுபவமாகத்தந்துள்ளன. அனைத்துக் கட்சி மாநாடுகளும், இதர பேச்சு வார்த்தைகளும் இதற்கு உதவும் கருவிகளாகவே விளங்கியிருக்கின்றன

## இராணுவமயமாக்கல்

பேச்சுவார்த்தைக்காக அரசு காலங்கடத்திய ஒன்றரை வருடங்களில் இராணுவ ரீதியிலும், அரசியல்ரீதியிலும் பெற்ற பெறுபேறுகளை நாங்கள் இங்கு மீட்டுக்கொள்ள வேண்டும்.

(வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரும் இளைஞர்)





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கூட்டணியின் ஆயுள் முடிந்தது...

இந்தக்கால இடைவெளியில் தான் இஸ்ரேலியமொசாத்தும், சின்பெத்தும் வரவழைக்கப்பட்டிருந்தன; அமெரிக்க, பிரித்தானிய, தென்னாபிரிக்க போர்க்கருவிகள் குவிக்கப்பட்டிருந்தன; சிங்களப் படைகளுக்கு அதிரடியிலும், புலனாய்விலும், இனஅழிப்பிலும் நவீன பயிற்சியின்கொடுக்கப்பட்டிருக்கின்றன. அரசியல்ரீதியில்பார்க்குமிடத்து அமெரிக்க சதிக் கும்பலுடனும், அதன் சகபாடிகளுடனும்நெருங்கியஉறவுகள் வளர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த உறவுகள் நெருக்கமடைந்தபோது இந்திய—இலங்கை உறவும் படிப்படியாக சீர்கெடுக்கப்பட்டு வந்துள்ளது.

## அரசியல் சூழ்ச்சி

தமிழ், மக்களின் பிரச்சினையில் 'நான் நினைப்பதையே நிறைவேற்றுவேன்' எனக் கூறியிருந்த ஜயவர்த்தன சிலசபைகள் பற்றிய கண்துடைப்பு யோசனைகளை முன்மொழிந்து வட்டமேசை மாநாட்டை முடித்து வைத்திருந்தார். 'இந்த யோசனைகள் தமிழர் பிரச்சனைகளைத் தீர்க்காது' என்று ஜீ பார்த்தசாரதி அபிப்பிராயப்பட்ட சில நாட்களில் ''வட்டமேசை தீர்மானங்கள் செல்லுபடியாகா'' எனஇதே ஜயவர்த்தன முறித்து வைத்தார்.

இந்த திடீர் முறிவுக்கு உள்ளார்ந்த அர்த்தமுண்டு ஜயவர்த்தன தனது சூழ்ச்சிகளுக்கேற்ற திட்டமிட்டு இந்தியாவை திருப்திப்படுத்தி இந்தியாவிடமுள்ள அமிர்தலிங்கத்தின் தொடர்பை துண்டித்து தனது வழிக்குஇழுப்பதனூடாக இந்தியாவின்அரசியல்'தலையீட்டை' தவிர்க்க முயற்சித்திருப்பதை அறியமுடிகிறது இந்தமுயற்சியில் அரசு வெற்றி பெற்றிருந்தால் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டதாக' தம்பட்டமடித்திருக்கும்.

ஜயவர்த்தன தரப்பிலிருந்து அவர்களது எதிர்பார்ப்புகள் சிதைந்து போனாலும்திராணியற்றிருக்கும் ''தமிழர் விடுதலைக் கூட்டணி''யை அறவே தீர்த்துக்கட்டுவதற்கு இதை ஒரு சந்தர்ப்பமாகக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கூட்டணி சக்தியிழந்துவிட்டது அதனுடன் பேசுவதில் பலனில்லை, நாம் இதற்கு வேறொரு அணுகுமுறையை செய்ய உத்தேசித்துள்ளோம் என அண்மையில் நெவில் சமரக் கோன் பேசிய பேச்சும் இதை உறுதிப்படுத்துகிறது.

அண்மைக்காலங்களில் பிரேமதாசா ஊடாக ''இயக்கங்களுடன் நாம் பேசத்தயார்'' என்ற விசேட அறிவித்தல்கள் முன்னெப்பொழுதையும்விடக் கூடுதலாக விடுக்கப்பட்டு வருவது அரசின் உள்நோக்கத்தை மேலும் தெளிவுபடுத்துகிறது.

அவதியுறும் கூட்டணியினரின் ஆயுள் தற்போது ஆயுதந்தாங்கிய இயக்கங்களின் கையிலேயே தங்கியுள்ளதென்பது வெளிப்படையாயிற்று.

இதனால் ஈழப்போராட்டம் புதியதொரு தோற்றத்துக்கு இப்போது வர இடமுண்டு. முன்னர் குறிப்பிட்டதுபோல் அரசவட்டாரங்கள் இராணுவ ரீதியிலோ, அரசியல்ரீதியிலோ கால அவகாசம் தேடும் பட்சத்தில் கூட்டணியுடன் பொழுது போக்குவதற்கு பதிலாக, இனிமேல் விடுதலை



(அகதிகளாக தென் இந்தியக் கரைகளில்..)

இதை உறுதி செய்யும் வகையில்''இனிமேல் பேச்சுவார்த்தைகளுக்கு இடமில்லை, 'ஆயுதப் போராட்டம் தவிர்க்க முடியாத ஒன்று'' என அமிர்தலிங்கம் சென்னையில் விடுத்த அறிக்கையும், ''மார்க்சிய மார்க்கத்தில் ஈழத்தை அமைப்போம்'' என் அரேபிய பத்திரிக்கைக்கு இவர் அளித்த பேட்டியும் அமையப் பெறுகின்றன. இதுமட்டுமல்லாமல் இ. தொ. கா தலைவர் தொண்டமான் கூட்டணிக்கு நேர்ந்திருக்கும் ஆபத்தை அறிந்து அது அடுத்து தனக்கு நேரப்போவதை உணர்ந்த நிலையில் தமிழர் பிரச்சினையை தீர்ப்பதில் அரசு தவறிழைத்துவிட்டதென அவசர அறிக்கை ஒன்றை விட்டிருப்பதும் இதை மெருகூட்டுவதாயிருக்கிறது. ஆகவே இயக்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்படலாம்.


இது அவசியம் எனக் கருதினால், மீண்டும் இந்தியாவிற்கு திக்விஜயம் செய்தே இதனை சாதிக்க வேண்டும். அத்துலத் முதலியின் திடீர் விஜயத்திற்கும் ஒரு மணிநேர பேச்சு வார்த்தைக்கும் இந்தப் பின்னணிதான் இருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

இயக்கங்களை நோக்கியுள்ள இந்தச் சந்தர்ப்பம் மக்கள் மீதான இராணுவக் கெடுபிடிகளுக்கு தற்காலிக நிவாரணம் தேடவும், இயக்கங்களை அரசியல் மட்டத்துக்கு தரமுயர்த்தவும் இவை தம்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பலப்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பளிக்குமென்ற அபிப்பிராயங்களும் இப்போது எழுந்துள்ளன.

பேச்சுவார்த்தை முயற்சிகள் ஒருபறமிருக்க, இந்தியப்படையெடுப்பை முறியடிக்க சிங்கள ஆட்சியாளர்கள் வேறு கோணத்தில் தயார்ப்பட்டு வருகிறார்கள்.

## வெளிநாட்டு உதவி

சாவகச்சேரித் தாக்குதல் நடந்ததும் அத்துலத் முதலி இது அந்நிய தலையீடு ஒன்றை ஏற்படுத்துவதற்கான முன் முயற்சி என்ற அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருந்தார். இந்தியாவை நோக்கிச் சொல்லப்பட்ட இந்தக்கருத்துடன் அமெரிக்காவுடனான இலங்கை அரசின் நெருங்கிய தொடர்பையும் நாம் கணிப்பீடு செய்யவேண்டும்.

கடந்த ஈழம் இதழில் நாம் குறிப்பிட்டது போல் இந்திய படையெடுப்பை முறியடிக்க வெளிநாட்டு படைஉதவி ஒன்றை பெறுவதற்காக செய்யும் முன்னேற்பாடே கடல் எல்லைப் பிரச்சனையாகும். இதற்காகவே இராமேஸ்வரம் மீனவர்களை சுட்டுக் கொன்றும், கடுமையாகத்தாக்கியும், தானே முன்னின்று எல்லைப்பிரச்சினையை சீண்டுகிறது இலங்கை அரசு, இது கடற்படை கப்பல்களை இந்தியா கைப்பற்றிய சம்பவம் வரை வளர்ந்துள்ளது. இலங்கை-இந்திய உறவின் தளர்வை உலகிற்கு எடுத்துக் காட்டியிருக்கிறது. அதுமட்டுமல்லாது இம்மீனவர்களை கொலை செய்வதன்மூலம் தமிழக மக்களை கொதிப்படைய செய்து, விடுதலை இயக்கங்கள் மீது வெறுப்பை ஏற்படுத்துவது இவர்களின் இன்னொரு நோக்கமாகவும் அமைகிறது.

கடல் எல்லையில் கருவெடுக்கும் இந்த வலிந்த குழப்பத்தின் உள்நோக்கை ஆனந்த திஸ்ஸடி அல்விசின் பேச்சு நாசுக்காக காட்டுகிறது ''அயல்நாடுகளின் படையெடுப்பை முறியடிக்க தென்கிழக்காசிய நாடுகள் தம்மிடையே கூட்டு இராணுவ நடவடிக்கைகளை ஏற்படுத்த வேண்டும்'' என்பதே ; இது உடனயாக முடியாது போனாலும் அரசு அமெரிக்க சார்புடைய தென்கிழக்காசிய நாடு ஒன்றுடனாவது இணைந்து படை உதவி கோர அடி கோலலாம்.

## இன்றைய கட்டாயம்

எனவே ஈழப்போராட்டத்தினை இங்கு நாம் குறிப்பிட்ட முனைகளில் எதிர்கொள்ளப் போகும் போராளிகள், சிங்கள ஏதேச்சாதிகாரத்தைக் கவிழ்ப்பதற்கு தகுந்த அணுகுமுறைகளுக்கு தம்மை விரைவாக தயார்படுத்திக் கொள்ள வேண்டும். பிரதானமாக அரசாங்கத்தின் திடநிலையை தகர்க்கக் கூடியதாயும், இராணுவவெறியர்களை குடாநாட்டுக்குள்ளேயே குவிய வழிவிடாது ஐதாக்க கூடிய இலக்குகளை தேர்ந்து தாக்கக்கூடியதாயும் ஒருமுகப்பட்டு செயற்படவேண்டியது கட்டாயமாக இருக்கிறது. இதுவே மக்களை தற்போது போராட்டப்பாதையை கைவிட்டு விட்டு அகதிகளாக ஓடிவந்து கொண்டிருக்கும் அபாயத்தை தடுத்து நிறுத்தவல்லது. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒற்றுமையும் போராட்டமும்

**83 ஜூலை மாதம் ஈழவரின் வரலாற்றில் ஒரு கரிமாதம். இதைத் தொடர்ந்து சிங்கள பேரினவாத அரசு கட்டவிழ்த்துவிட்ட இராணுவ அட்டகாசங்களும், கொடுங்கோன்மைச் சட்ட திட்டங்களும் தமிழ் பேசும் மக்களின் அன்றாட வாழ்க்கை முறைகளை சீர்குலைத்ததுடன் ஆயிரமாயிரம் அப்பாவி ஈழவரை கொன்று குவித்தும் உள்ளது. மேலும் கிராமம் கிராமமாகச் சுற்றிவளைத்து அங்குள்ள அப்பாவி மக்களின் உடைமைகளையும், கற்பையும் சூறையாடி அவர்களைக் கொன்று குவிக்கும் சிங்கள இராணுவத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் பலரும் அயல் நாட்டை நோக்கி அகதிகளாக ஓடுவது இன்று சர்வசாதாரணமாகிவிட்டது.**

**சிறிலங்கா அரசின் இந்தத் திட்டமிட்ட நடவடிக்கைகளினால் ஈழத்தின் பொருளாதாரம் நொருக்கப்பட்ட நிலையில், தம் உயிருக்காகப் பயந்து கிலி பிடித்த நிலையில் வாழும் ஈழவர் தம்மிடையே உள்ள இயக்கங்கள் பலவும் ஒன்றுபட வேண்டுமென்று அழுத்தந் திருத்தமாகக் கூறுவது நியாயமானதொன்றே. ஒற்றுமையின் அவசியத்தை இந்த விடுதலை இயக்கங்கள் உணராததனால் தம் உயிரையே தியாகம் செய்தாகிலும் இந்த உணர்வை ஏற்படுத்துவோம் என்று பலரும் இன்று உறுதி பூண்டுவிட்டார்கள். இது ஈழவரின் விடுதலை வேட்கையின் ஒருமித்த வெளிப்பாடாகவே அமைகிறது.**

**இந்தச் சூழ்நிலையில்தான் தாம் தனம் தேடிக்கொள்ளவும், அழிந்துபோன தம் செல்வாக்கை நிலைநாட்டித் தம் தலைமைப் பீடத்தை உறுதிப்படுத்தவும் ஒருசிலர் ஒற்றுமை என்ற பெயரில் ஒற்றுமையின்மையை வளர்க்க வழி தேடுகிறார்கள். இயக்கங்களிடையே ஒற்றுமையின்மையால் இவை எதையும் சாதித்துவிட முடியாது. மக்கள் ஆதரவை இழந்துவிட்டன என்ற கருத்தை முன்வைத்து தமக்குச் சாதகமாக வெளிநாடுகளில் ஈழவர் எதிர்கால நலன்களில் எதுவித கரிசனையும் இன்றி தம்மைப் பிரபல்யப்படுத்தவும் இவர்கள் தயங்கவில்லை.**

உண்மையில் எல்லா விடுதலை இயக்கங்களும் ஒருகூட்டுஅமைப்பின்கீழ் இன்று இயங்காவிட்டாலும், அவர்களின் நோக்கையும் இலக்கையும் பொறுத்த வரையில் ஒற்றுமைப்பட்டுள்ளனர் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லலாம். தமிழ் பேசும் மக்களின் இன்னல் தீர்ந்திட சமத்துவ ஈழம் அமைப்பது அவசியம் என்பதிலும், இதற்கு ஆயுதப் போராட்டம் பிரதான போராட்ட வழிமுறையாக அமைகிறது என்பதிலும் அசைக்க முடியாத நம்பிக்கையும், ஒற்றுமையும் இவர்கள் கொண்டுள்ளார்கள். இருந்தாலும் இயக்கத்தோற்ற வரலாறு காரணமாகவும்; போர்முறை, மூல உபாயம், தந்திரம், அணுகு முறைகளில் மாறுபட்ட கருத்துக்கள் கொண்டுள்ளமையாலும் இந்த் இயக்கங்களிடையே வித்தியாசம், அபிப்பிராய பேதங்கள், போட்டி மனப்பான்மைகள் வளர்ந்துள்ளது உண்மைதான். இந்த நிலையிலும் கூட இவ்வியக்கங்கள் தம்மிடையே ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்திய அடிப்படையில் ஒரு கட்டுமான வரையறுப்பிற்குள் வேலை செய்ய, தொடர்ந்த பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளமை வரவேற்கத்தக்கதொன்றே. இந்த முயற்சியின் பிரதிபலனாகத்தான் TELO, EROS, EPRLF. இயக்கங்களிடையே ஒரு புரிந்துணர்வின் அடிப்படையிலான கூட்டுறவு ஏற்பட்டுள்ளது. மேலும் இவர்களும், ஏனைய இயக்கங்களும் தொடர்ந்த, நிரந்தர பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளமை வரவேற்கத்தக்க ஒன்றே. இந்தப் பேச்சு வார்த்தைகள் நிச்சயமாக வெற்றியளிக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஏனெனில் இன்றைய காலகட்டத்தில் ஒற்றுமையின் அவசியத்தை எல்லா இயக்கங்களும் அனுபவ ரீதியாக உணரத் தொடங்கிவிட்டன.

முதலில், தமிழ்த்தேசிய இனம் சீரழிந்து போகாமல் ஈழவரின் தேசிய இன உணர்வும், விடுதலை வேட்கையும் மழுங்கடிக்கப்பட்ட நிலையில் வெவ்வேறு நாடுகளில் அகதிகளாக அல்லல்படாமல் தமது சொந்த நாட்டிலேயே தம் எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். எம்மை நாம் இராணுவ ரீதியாகவும், சுயதேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வகையிலும் நிலை நாட்டிக் கொள்ள வேண்டும். இதற்கு எல்லா இயக்கங்களிடையேயும் குறைந்த பட்சம் இராணுவ ரீதியிலாவது கூட்டுறவு ஏற்பட வேண்டும் என்பதனையும் இயக்கங்களிடையே உள்ள வேறுபாடுகள், பகைமை உணர்வுகள் வித்தியாசங்களைச் சாதகமாகப் பயன்படுத்தி இயக்கங்களை அழித்தொழிப்பதன் மூலம் ஈழவரின் போரட்டத்தை முறியடிக்க சிறிலங்கா பேரினவாத அரசும், வெளிநாட்டுச் சக்திகளும் எடுக்கும் முயற்சிகளை முறியடிக்க வேண்டியது அவசியமாகிறது.

ஒட்டு மொத்தமான திட்ட அடிப்படையில் வேலை செய்வதன் மூலம்தான் எதிரியை முடியடிக்க முடியும் என்பதனையும் ஈழவரின் முழுவிடுதலைக்கும் வழிவகுக்க முடியும் என்பதனையும், அனுபவரீதியாக எல்லா இயக்கங்களும் உணரத் தொடங்கிவிட்டன. ஆக, இன்றைய காலகட்டத்தில் ஒற்றுமை அவசியம் என்பதை எல்லா இயக்கங்களும் ஏற்றுக் கொண்டுள்ளன. ஆனால் என்ன செய்ய வேண்டுமெனத் தெரிந்து கொள்வதுவேறு; எப்படிச் செய்யவேண்டும் என்பது வேறு; இங்குதான் ஒற்றுமை பூரணப்படுத்தப்படாமல் இருப்பதற்கான சிக்கலும் உள்ளது.

இந்தச் சிக்கல் நிலையில்தான், இந்த இடைக்கால நிலையில்தான் பிற்போக்குச் சக்திகளும், சிறிலங்கா அரசும் ஏகாதிபத்தியத்தின் ஊது குழல்களாக, ஈழவர் மத்தியிலுள்ள இயக்கங்களைச் சீண்டிவிட்டும், குழப்பிவிட்டும் வேடிக்கை பார்க்கின்றன. இதற்கு உறுதுணை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாகப் போவது போலத்தான் ஏற்கனவே இயக்கங்களிடையே ஏற்பட்டுள்ள TELO, EROS, E.P.R.L.F. உடன்பாட்டை முறியடித்து, எல்லா இயக்கங்களுக்கிடையேயும் இன்று ஏற்பட்டுவரும் புரிந்துணர்வையும் தகர்த்தெறிந்து தம் சொந்த நலன்களுக்காக "யாரி" கட்டிக் கொள்ள வெவ்வேறு இயக்கங்களோடு சோடி சேரப் பகிரதப் பிரயத்தனம் செய்கின்றார்கள். எம்மிடையேயுள்ள சில தளமற்ற "தலைவர்மார்கள்" ஒற்றுமை என்று காலங்காலமாக பேசிக்கொண்டு ஒற்றுமையின்மைக்கு வழிவகுக்கும் இவர்களின் முகமூடியைக் கிழித்தெறிந்து எல்லா இயக்கங்களும் ஒரு புரிந்துணர்வின் அடிப்படையில் ஒற்றுமைப்படுவார்கள் என்பது நிச்சயம். இது இன்றைய நிகழ்வுகளை அவதானிக்கும் போது நிச்சயமான தொன்றாகவுள்ளது.

**உண்மையில் இந்த ஒற்றுமை ஒரு ஜீவித உறவாக வளர வேண்டுமானால், உயிர்த் துடிப்புள்ள "செயலங்க" மாக வளர வேண்டுமானால், ஒற்றுமை பூரணப்படுத்தப்பட்டு வழமையடைய வேண்டுமானால், ஒற்றுமை, எந்தத்திட்ட அடிப்படையில் ஏற்பட வேண்டும்; ஒற்றுமை, போராட்டத்தில் இருந்து அந்நியப்படுத்தப்பட்ட நிலையில் வெற்றி பெறுமா? யந்திர ரீதியான ஒற்றுமை பலன் அளிக்குமா? என்ற கேள்விகளுக்குப் பதிலளித்தே ஆக வேண்டும். ஆக ஒற்றுமை என்றால் என்ன என்பதைத் தத்துவார்த்த ரீதியாக அறிந்து கொண்டும், இதற்கும் போராட்டத்திற்கும் உள்ள தொடர்பு என்ன என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.**

## ஈழவர் மத்தியில் வேறுபாடுகள்

ஈழவர் மத்தியில் வித்தியாசங்கள்வேறுபாடுகள் உள்ளமையால் தான் ஒற்றுமை பற்றிய பேச்சே எழுகின்றது. இல்லாது போனால் ஒற்றுமை பற்றிய பேச்சுக்கே இடமில்லை. இந்த வித்தியாசங்களும், வேறுபாடுகளும் அரசியல் பொருளாதார, சமூக ரீதியில் அமைந்தவை. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியும், வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகளும், மேற்கத்திய நாடுகள் ஈழத்தில் ஆட்சி செலுத்தியமையும் இவ்வித்தியாசங்களுக்கு அடிகோலிகளாக அமைந்தன. வர்க்க ரீதியான வித்தியாசங்கள், சாதி, சமய ரீதியிலான வித்தியாசங்கள், இன்னும் போனால் பிரதேச ரீதியான வித்தியாசங்களும் கூட நம்மிடையே உள்ளன. இலங்கை அரசாட்சியில் ஒரு சில மந்திரிகள் தவிர ஈழத் தமிழர் பங்களிப்பு எந்தக்காலத்திலும் இல்லாதிருந்த போதிலும். ஈழவர் மத்தியில் அரசியற்கட்சிகள் இருந்து வந்தது என்பது வரலாற்று உண்மை காலபோக்கில் இலங்கையில் தேசிய இனப் பிரச்சனை முக்கிய முரண்பாடாக முனைப்பெடுத்தபோது பல கட்சிகளும் சேர்ந்து உருவாக்கியதுதான் விடுதலைக் கூட்டணி காலத்திற்கேற்ற வகையில் தம் போராட்ட அணுகு முறைகளையும், உத்திகளையும், வழிவகுத்துக் கொள்ளாத நிலையில் வளர்ந்து வரும் ஈழவர் போராட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் தம் சொந்த உள் முரண்பாடுகளாலும், இனவாதத்தாலும் உடைந்த கூட்டணியின் தளத்திலிருந்து பிறந்தவைதான் இன்றைய பல இயக்கங்கள்.

இந்த அரசியல், பொருளாதார, சமூக வித்தியாசங்கள் எம்மிடையே உள்ளன என்பதை ஏற்றுக் கொண்டால் தான் உண்மையான ஒரு ஜீவித உறவை எம் மக்களிடையே உருவாக்க முடியும் அரசியல் ரீதியாக பல இயக்கங்களிடையேயும் ஒற்றுமையை மட்டும் வளர்த்தெடுப்பது போதாது. பல பிரிவுகளாக பிளவுபட்டுள்ள ஈழவர் மத்தியில் ஒரு ஜீவித உறவை ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும். இதன் அடிப்படையில்தான் இயக்கங்களிடையிலான ஒற்றுமையையும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

பல முரண்பாடுகள் கொண்டுள்ள ஈழவர் மத்தியில் இன்று "தேசிய இன முரண்பாடு" முக்கிய முரண்பாடாக வளர்ந்துள்ளது. தமிழ் பேசும் மக்கள் என்ற முறையில் சாதி சமய வர்க்க வேறுபாடுகளின்றி ஒரே வகையான அடக்கு முறைக்கு தமிழ்பேசும் மக்களை சிறிலங்கா எதேச்சதிகார அரசு உட்படுத்துகின்றது. இந்த அடக்கு முறைக்கெதிராகப் போராடுவது இயற்கையே. ஆனால் இந்தப் போராட்டத்தில் அவர்களுக்குள்ள ஐக்கியமும் எதிர்பார்ப்புகளும் வர்க்க ரீதியிலான அவரவர் எண்ண அபிலாசைகளையும், நலன்களையும் பொறுத்தே அமையும். இதுவும் இயல்பானதே ஏனென்றால் மனிதனை பண்ட உற்பத்தியிலிருந்துபிரித்துப்பார்க்கமுடியாது. உழைப்பின் அடிப்படையில்தான் மிருகத்தில் இருந்து மனிதனும் வளர்ந்தான். ஆகவே மனிதன் எப்பொழுதும் தன்னை பண்ட உற்பத்தியுடனேயே பிணைத்துக் கொள்வான். இந்த அடிப்படையில்தான் அடக்கு முறைக்கு எதிரான அவனது போராட்டமும், பண்டஉற்பத்தி, விநியோகம், உற்பத்தி உறவுகள் என்ற படிக்கட்டுமானத்தில் அவரவர் நிலைப்பாட்டிற்கேற்ற நலன்களையும், எண்ண அபிலாசைகளையும் பிரதிபலிக்கும் வண்ணம் அமையும். உதாரணமாக கையில் "மூலதனம்" வைத்திருப்பவர்களும் உற்பத்திச்சாதனங்களைக் கட்டி ஆள்பவர்களும் விடுதலைக்குப்பின் இப்பொழுது இருக்கும் சமூக, பொருளாதார உறவுகளை தத்தமது நன்மைக்காகநீடிக்கும் வகையில் அரசாட்சியை நிர்மாணித்துக் கொள்வார்கள் அல்லது தமது மூலதனத்திற்குப் பங்கம் வராத வகையில் அதைப் பெருக்கக்கூடிய சூழல் உருவாகுமேயானால் ஈழவர் விடுதலைப் போராட்டத்தையே தூக்கி எறிந்துவிட்டு சிறிலங்கா எதேச்சாதிகார அரசுடன் இணக்கத்தை ஏற்படுத்திப் பேரம்பேச முயல்வார்கள். ஆனால்

**ஈழவர் மத்தியில் ஆகக்கூடிய தொகையுள்ள தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், எதையுமே இழக்க இல்லாத நிலையில் இன்றைய சமூக பொருளாதார பேதங்களை அகற்றி ஒரு சமத்துவ சமதர்ம சமுதாயத்தை உருவாக்கக்கூடிய அரசாட்சியையே நிர்மாணிக்க முனைவார்கள்.**

## முன்னணி சக்தி எது?

இதனால்தான் இன்றைய ஈழவர் போராட்டத்தின் உந்து சக்தி எது? முன்னணி எது? பின்னணி எது? என்பதை தெட்டத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். ஈழப் போராட்டத்தின் உள்ளடக்கத்தையும், குணும்சத்தையும் அறிந்து கொள்வதன் மூலம்தான் மக்களிடையே ஒரு 'ஜீவித ஒற்றுமையை ஏற்படுத்திப் பலவான்களான எதிரியை முறியடிக்க முடியும்.

இன்றைய ஈழப் போராட்டத்தின் முக்கிய அம்சம் இன அடக்கு முறைக்கு, ஒடுக்கலுக்கெதிரான போராட்டமே என்பதை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. ஆனால் இந்தப் போராட்டம் 'பூர்சுவா-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாகப் போவது போலத்தான் ஏற்கனவே இயக்கங்களிடையே ஏற்பட்டுள்ள TELO, EROS, E.P.R.L.F. உடன்பாட்டை முறியடித்து, எல்லா இயக்கங்களுக்கிடையேயும் இன்று ஏற்பட்டுவரும் புரிந்துணர்வையும் தகர்த்தெறிந்து தம் சொந்த நலன்களுக்காக ''யாரி'' கட்டிக் கொள்ள வெவ்வேறு இயக்கங்களோடு சோடி சேரப் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றார்கள். எம்மிடையேயுள்ள சில தளமற்ற ''தலைவர்மார்கள்'' ஒற்றுமை என்று காலங்காலமாக பேசிக்கொண்டு ஒற்றுமையின்மைக்கு வழிவகுக்கும் இவர்களின் முகமுடியைக் கிழித்தெறிந்து எல்லா இயக்கங்களும் ஒரு புரிந்துணர்வின் அடிப்படையில் ஒற்றுமைப்படுவார்கள் என்பது நிச்சயம். இது இன்றைய நிகழ்வுகளை அவதானிக்கும் போது நிச்சயமான தொன்றாகவுள்ளது.

**உண்மையில் இந்த ஒற்றுமை ஒரு ஜீவித உறவாக வளர வேண்டுமானால், உயிர்த் துடிப்புள்ள ''செயலங்க''மாக வளர வேண்டுமானால், ஒற்றுமை பூரணப்படுத்தப்பட்டு வழமையடைய வேண்டுமானால், ஒற்றுமை, எந்தத்திட்ட அடிப்படையில் ஏற்பட வேண்டும்; ஒற்றுமை, போராட்டத்தில் இருந்து அந்நியப்படுத்தப்பட்ட நிலையில் வெற்றி பெறுமா? யந்திர ரீதியான ஒற்றுமை பலன் அளிக்குமா? என்ற கேள்விகளுக்குப் பதிலளித்தே ஆக வேண்டும். ஆக ஒற்றுமை என்றால் என்ன என்பதைத் தத்துவார்த்த ரீதியாக அறிந்து கொண்டும், இதற்கும் போராட்டத்திற்கும் உள்ள தொடர்பு என்ன என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.**

## ஈழவர் மத்தியில் வேறுபாடுகள்

ஈழவர் மத்தியில் வித்தியாசங்கள்வேறுபாடுகள் உள்ளமையால்தான் ஒற்றுமை பற்றிய பேச்சே எழுகின்றது. இல்லாது போனால் ஒற்றுமை பற்றிய பேச்சுக்கே இடமில்லை. இந்த வித்தியாசங்களும், வேறுபாடுகளும் அரசியல் பொருளாதார, சமூக ரீதியில் அமைந்தவை. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியும், வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகளும், மேற்க்த்திய நாடுகள் ஈழத்தில் ஆட்சி செலுத்தியமையும் இவ்வித்தியாசங்களுக்கு அடிகோலிகளாக அமைந்தன. வர்க்க ரீதியான வித்தியாசங்கள், சாதி, சமய ரீதியிலான வித்தியாசங்கள், இன்னும் போனால் பிரதேச ரீதியான வித்தியாசங்களும் கூட நம்மிடையே உள்ளன. இலங்கை அரசாட்சியில் ஒரு சில மந்திரிகள் தவிர ஈழத் தமிழர் பங்களிப்பு எந்தக்காலத்திலும் இல்லாதிருந்த போதிலும். ஈழவர் மத்தியில் அரசியற் கட்சிகள் இருந்து வந்தது என்பது வரலாற்று உண்மை காலபோக்கில் இலங்கையில் தேசிய இனப் பிரச்சனை முக்கிய முரண்பாடாக முனைப்பெடுத்தபோது பல கட்சிகளும் சேர்ந்து உருவாக்கியதுதான் விடுதலைக் கூட்டணி காலத்திற்கேற்ற வகையில் தம் போராட்ட அணுகு முறைகளையும், உத்திகளையும், வழி வகுத்துக் கொள்ளாத நிலையில் வளர்ந்து வரும் ஈழவர் போராட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் தம் சொந்த உள் முரண்பாடுகளாலும், இனவாதத்தாலும் உடைந்த கூட்டணியின் தளத்திலிருந்து பிறந்தவைதான் இன்றைய பல இயக்கங்கள்.

இந்த அரசியல், பொருளாதார, சமூக வித்தியாசங்கள் எம்மிடையே உள்ளன என்பதை ஏற்றுக் கொண்டால்தான் உண்மையான ஒரு ஜீவித உறவை எம் மக்களிடையே உருவாக்க முடியும் அரசியல் ரீதியாக பல இயக்கங்களிடையேயும் ஒற்றுமையை மட்டும் வளர்த்தெடுப்பது போதாது. பல பிரிவுகளாக பிளவுபட்டுள்ள ஈழவர் மத்தியில் ஒரு ஜீவித உறவை ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும். இதன் அடிப்படையில்தான் இயக்கங்களிடையிலான ஒற்றுமையையும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

பல முரண்பாடுகள் கொண்டுள்ள ஈழவர் மத்தியில் இன்று ''தேசிய இன முரண்பாடு'' முக்கிய முரண்பாடாக வளர்ந்துள்ளது. தமிழ் பேசும் மக்கள் என்ற முறையில் சாதி சமய வர்க்க வேறுபாடுகளின்றி ஒரே வகையான அடக்கு முறைக்கு தமிழ்பேசும் மக்களை சிறிலங்கா எதேச்சதிகார அரசு உட்படுத்துகின்றது. இந்த அடக்கு முறைக்கெதிராகப் போராடுவது இயற்கையே. ஆனால் இந்தப் போராட்டத்தில் அவர்களுக்குள்ள ஐக்கியமும் எதிர்பார்ப்புகளும் வர்க்க ரீதியிலான அவரவர் எண்ண அபிலாசைகளையும், நலன்களையும் பொறுத்தே அமையும். இதுவும் இயல்பானதே ஏனென்றால் மனிதனை பண்ட உற்பத்தியிலிருந்துபிரித்துப்பார்க்கமுடியாது. உழைப்பின்அடிப்படையில்தான் மிருகத்தில் இருந்து மனிதனும் வளர்ந்தான். ஆகவே மனிதன் எப்பொழுதும் தன்னை பண்ட உற்பத்தியுடனேயே பிணைத்துக் கொள்வான். இந்த அடிப்படையில்தான் அடக்கு முறைக்கு எதிரான அவனது போராட்டமும், பண்டஉற்பத்தி, விநியோகம், உற்பத்தி உறவுகள் என்ற படிக்கட்டுமானத்தில் அவரவர் நிலைப்பாட்டிற்கேற்ற நலன்களையும், எண்ண அபிலாசைகளையும் பிரதிபலிக்கும் வண்ணம் அமையும். உதாரணமாக கையில் ''மூலதனம்'' வைத்திருப்பவர்களும் உற்பத்திச்சாதனங்களைக் கட்டி ஆள்பவர்களும் விடுதலைக்குப்பின் இப்பொழுது இருக்கும் சமூக, பொருளாதார உறவுகளை தத்தமது நன்மைக்காகநீடிக்கும் வகையில் அரசாட்சியை நிர்மாணித்துக் கொள்வார்கள் அல்லது தமது மூலதனத்திற்குப் பங்கம் வராத வகையில் அதைப் பெருக்கக்கூடிய சூழல் உருவாகுமேயானால் ஈழவர் விடுதலைப் போராட்டத்தையே தூக்கி எறிந்துவிட்டு சிறிலங்கா எதேச்சாதிகார அரசுடன் இணக்கத்தை ஏற்படுத்திப் பேரம்பேச முயல்வார்கள். ஆனால்

**ஈழவர் மத்தியில் ஆகக்கூடிய தொகையுள்ள தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், எதையுமே இழக்க இல்லாத நிலையில் இன்றைய சமூக பொருளாதார பேதங்களை அகற்றி ஒரு சமத்துவ சமதர்ம சமுதாயத்தை உருவாக்கக்கூடிய அரசாட்சியையே நிர்மாணிக்க முனைவார்கள்.**

## முன்னணி சக்தி எது?

இதனால்தான் இன்றைய ஈழவர் போராட்டத்தின் உந்து சக்தி எது? முன்னணி எது? பின்னணி எது? என்பதை தெட்டத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். ஈழப் போராட்டத்தின் உளளடக்கத்தையும், குணாம்சத்தையும் அறிந்து கொள்வதன் மூலம்தான் மக்களிடையே ஒரு 'ஜீவித ஒற்றுமையை ஏற்படுத்திப் பலவான்களான எதிரியை முறியடிக்க முடியும்.

இன்றைய ஈழப் போராட்டத்தின் முக்கிய அம்சம் இன அடக்கு முறைக்கு, ஒடுக்கலுக்கெதிரான போராட்டமே என்பதை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. ஆனால் இந்தப் போராட்டம் 'பூர்சுவா-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜனநாயகப்) 'போராட்டமாக, முதலாளிகளின் அல்லது அவர்களது அடிவருடிகளினது தலைமையின்கீழ், அவர்களது எண்ண அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் வகையில், அவர்களது வர்க்க நலன்களைப் பேணும் வகையிலான போராட்டமாக அமைய வேண்டிய அவசியமில்லை.

**உண்மையில் ஈழத்தைப் பொறுத்தமட்டில் பூர்சுவா-ஜனநாயகப் போராட்டம் என்பது தன்உள் முரண்பாடுகளாலும், பிரிவினை இனவாதத்தாலும் வலுவிழந்து, பலம் குன்றி போராட்ட வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் அடிசாய்ந்து விட்டது.**

# ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் ஒற்றுமை காண்பதில்தான் புரட்சிகரப் போராட்ட முன்னணியைக் கட்டி எழுப்ப முடியும்.

இந்த நிலையில்தான் மீண்டும் ஈழவர் போராட்டத்தின் முக்கிய முன்னணி யார்? அதன் போராட்ட சக்தி எது என்று கேட்க வேண்டும். இன்றைய நிலையில் ஈழப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லக் கூடிய சக்தி தொழிலாளர்களே. முக்கியமாக மலையகத் தோட்டத் தொழிலாளர்களே இதற்குப் பின்னணிச் சக்தியாகத்தான் விவசாயிகளும் ஏனைய ஒடுக்கப்பட்ட மக்களும் அமைகின்றார்கள் இன்றைய நிலையில் ஈழப் போராட்டம்பூர்சுவாத் தலைமையில் இல்லாமல் தொழிலாளர், விவசாயிகள், ஒடுக்கப்பட்ட மக்களின் தலைமையில் விழுந்துள்ளது. இது வரலாற்று உண்மை. இதைவளர்த்தெடுக்க வேண்டியது ஒவ்வொரு புரட்சிவாதியினதும் கடமையாகும்.

ஆகவேஒற்றுமையைஎண்ணும்போது இவர்களிடையே ஒரு ஜீவித உறவை உருவாக்கக்கூடிய ஒற்றுமையே அதி முக்கியமானது. இந்த ஒற்றுமைக்கு தடைக்கல்லாக எம்மிடையே இருக்கும் பிரிவினைவாதம் நிற்கிறது. மலைநாட்டுத் தமிழன், முஸ்லிம், மட்டக்களப்பான், யாழ்ப்பாணத்தான் என்றுபிரிவுபடுத்தி ஒரு சிலர் நலன்களுக்காக இதுவரை காலமும் ஈழவர் வாழ்ந்த வாழ்க்கையை இன்னும் தொடரவிடாமல்-தொழிலாளர், விவசாயிகள், ஒடுக்கப்பட்ட மக்களிடையே ஜீவித ஒற்றுமையைக் காணுவது அவசியம். இதற்கு அவர்களின் எண்ண, அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் வகையிலான திட்டங்களையும், நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். தோட்டத் தொழிலாளர்களின் அன்றாடப்பிரச்சனைக்கான போராட்டம் ஒவ்வொன்றிலும் உளப் போராட்டத்தையும் முன்னெடுக்கும் வகையில் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் வாழும் தொழிலாளர், விவசாயிகள் எந்தவித நிபந்தனையுமின்றி பங்களிக்கும் வகையில் செயற்பட வேண்டும். அதற்கான தெளிவான மூல உபாயத்தையும் முன்வைக்க வேண்டும்.

மேலும் ஆயுதப் போராட்டத்தை, இவர்களை ஒன்றிணைக்கக் கூடிய வகையினூலான உத்திகளைக் கையாண்டு எல்லா நடவடிக்கைகளிலும் இழையோடிய வகையில் செயற்படுவதன் மூலம் ஒரு இணைப்புச் சக்தியாக வளர்த்தெடுக்க வேண்டும்.

## செயலங்கமான ஒற்றுமை

இந்த வகையிலான போராட்டங்களினூடாகத்தான் தொழிலாளர், விவசாய, ஒடுக்கப்பட்ட மக்களிடையே ஒரு ஜீவித உறவை, ஒற்றுமையை உருவாக்கலாம். இது முக்கியமான தொன்று, ஏனென்றால் இவர்களிடையே ஜீவித ஒற்றுமை இல்லாத பட்சத்தில் சிறிலங்கா அரசு தனது பிரித்தாளும் தந்திரத்தின் மூலமும் ஈழவர் போராட்டத்தை மழுங்கடிக்க முடியும்.

இயக்கங்களிடையேயான ஒற்றுமை வெறும் யந்திர ரீதியிலான ஒற்றுமையாக அமைந்தால், போராட்டத்தில் இருந்து பிரிந்த நிலையில்அழிந்தொழிந்து போகவேண்டியதாகவே இருக்கும். அனுபவ ரீதியாக இதனை அறியலாம். மக்களைப் போராட்டத்தின் மூலம் ஒற்றுமைப்படுத்தும் வகையில் தேவையான குறைந்தபட்ச ஒற்றுமையை முதலில் இயக்கங்களிடையே உருவாக்குவது அவசியம். தமிழர் விடுதலைக் கூட்டணி, எல்லாக் கட்சிகளும் ''ஒற்றுமையாகி'' உருவாகியிருந்தாலும் அது வெறும்கூட்டமைப்பாகவே போய்விட்டது. ஏனென்றால் இயந்திர ரீதியிலான இந்த ஒற்றுமை எந்தப் போராட்டத்தையும் காலத்திற்கேற்ற வகையில் முன்னெடுக்காததே.

ஆகவே ஒட்டு மொத்தமாக ஒரு ''விடுதலைசபை'' அமைத்து அதில் எல்லா இயக்கங்களையும் ஒன்று சேர்த்துவெளிநாட்டு உதவியுடன் போராட்டத்தை முன்னெடுக்கலாம் என்ற எண்ணப்பாடு தவறானது.

**உண்மையில் இயக்கங்களிடையே உள்ள பகைமை உணர்வுகளையும், போட்டா போட்டிகளையும், போராட்ட அணுகுமுறைகளையும் கணக்கிலெடுத்துப் பார்த்தோமானல் ஒரு விடுதலைச் சபையை உருவாக்கக்கூடிய நிலையின்மையையே பார்க்கலாம். ஆனாலும் நடவடிக்கைகளில் ஒற்றுமை (Unity in Action) என்ற அடிப்படையில் இணைந்து வேலை செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இது இராணுவ நடவடிக்கைகளானாலும் சரி, பிரச்சாரம் புனரமைப்பு வேலைகளானாலும் சரி ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் ஒற்றுமை காண்பதில்தான், இந்த செயற்பாடுகள் தொழிலாளர், விவசாய, ஒடுக்கப்பட்ட மக்களிடையே ஒரு ஜீவித உறவை ஏற்படுத்தும் போராட்ட வடிவங்களாக அமையும் போதுதான் உண்மையான புரட்சிகரப் போராட்ட முன்னணியாகக் கட்டியெழுப்ப முடியும். இதற்கான சாத்தியக் கூறுகள் இன்று வெளிப்படையாகவே தெரிகிறது.**

**இதனால்தான்**
**ஈழப்புரட்சி நிதர்சனம் என்கிறோம்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உடன்படிக்கைகள் பேச்சுவார்த்தைகள் படிப்பினைகள்

"ஆயுதங்களை போடுங்கள் பிரச்சனைகளைப் பேசித் தீர்ப்போம்" சிறிலங்கா பிரதமர் பிரேமதாசா அறிவிப்பு. அண்மைகாலத்தில் இது போன்ற பல குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன ஈழப்போராட்டம் முனைப்பு எடுத்துக் கொண்டிருக்கும் இக்காலத்தில் ஜனநாயகத் தலைமையான தமிழர் விடுதலைக் கூட்டணியுடனான பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்ட சூழ்நிலையில் இயக்கங்கள் தங்களுக்கிடையிலான முரண்பாடுகளை களைந்து கூட்டமைப்பை இறுக்கமாக்கிக் கொண்டிருக்கையில் இக்குரல் எதிர் தரப்பில் இருந்து ஒலிக்கத் தொடங்கியுள்ளது. சிறிலங்காவின் பொருளாதாரமே முடக்கப்பட்டு அரசு ஆட்டங்காணத்தொடங்கியுள்ள நிலையில் இவ் அறிவிப்பு குறித்து நாம் ஆழமாக சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். இவ்அறிவிப்புச் சூழ்நிலை குறித்தும், இயக்கங்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் பரபரப்பு குறித்தும் நாம் கவனிக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

## சிறிலங்கா அரசின் அடக்குமுறை

என்றும் இல்லாதவாறு அண்மைக் காலத்தில் சிறிலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. ஈழவர்கள் தமது வாழ்வை முற்றாக தொலைத்து விட்ட நிலையில் நாட்டை விட்டு வெளியேறி அண்டை நாடுகளில்அகதிகளாய் அடைக்கலம் கோரும் அபாயம் தோற்றுவிக்கப் பட்டுள்ளது. கடந்த மாதத்தில் ஈழத்தை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சம் புகுந்தவர்களின் எண்ணிக்கை ஏழாயிரம் பேர் என கணக்கிடப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலை உருவாக்கத்தினூடாகத்தான் பேச்சுவார்த்தைக்கான அறிகுறிகளும் வெளிவரத் தொடங்கியுள்ளன.

இதே வேளையில் கடல் கடந்த நாடுகளில் வாழும் ஈழவர்களது எண்ணப்பாட்டையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். தாங்கள் பணம் கொடுத்தால் தமிழீழத்தை வென்றுவிடலாம் தங்கள் நலன்களை பாதுகாத்துக் கொள்ளலாம் என்ற அவர்களின் கனவுகள், நீண்டு கொண்டிருப்பதை அவர்களால் சகித்துக் கொள்ள முடியாமல் இருக்கிறது. இதனால் தமது விடுமுறை நாட்களை பயன்படுத்திக் கொண்டு சென்னையை முகாமிடத் தொடங்கியுள்ளனர். இவர்கள் இயக்கங்களை பணத்தினூடாக நெருக்குவாரத்திற்குள்ளாக்கி வருகின்றனர். சமரசப்போக்கில் தீர்வைக் கொண்டுவரலாம் எனவும் போதனை செய்யத் தொடங்கியுள்ளனர். சமரசத் தீர்வில் தம் பதவிகளுக்கான தயாரிப்புகளிலும் தீவிரமாய் இறங்கியுள்ளனர்.

இவ் வேளையில் மிகக் குறைந்த தீர்வுகளுடன் சமரசத்தை மேற்கொள்வதற்கான பகிரத்தன முயற்சியில் சிறிலங்கா அரசு இறங்கத்தொடங்யுகிள்ளது. தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித்அதுலத் முதலி அவசரமாக டெல்லிவந்து இந்தியபிரதமர் ராஜீவுடன் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தித் திரும்பினர். இதனை அடுத்து இயக்கங்களை சமரசத்திற்கு தள்ளுவதற்கான சூழ்நிலைகள் இறுக்கப்படத்தொடங்கின. இவ்வேளையில்தான் பேச்சுவார்த்தை குறித்தும் கடந்த கால ஒப்பந்தங்கள் குறித்தும் நாம் தீர்க்கமாக சிந்திக்கவேண்டியவர்களாக உள்ளோம்.

## உடன்படிக்கைகளின்வரலாறு!

நாம் இங்கே கவனத்தில் எடுக்கும் ஒப்பந்தங்கள் சட்டசபையிலும் பாராளுமன்றத்திலும் பிரதிநிதித்துவம் கோரியதாகவே அமைந்திருக்கின்றன. 1919 கால கட்டத்தில் முதலாவது ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. சிங்களமக்கள் தரப்பில் திரு. ஜேம்ஸ்பீரிஸ், திரு. சமரவிக்கிரம ஆகியோர் ஒரு பக்கமாகவும் சேர், பொன். அருணசலம்தமிழ்பேசும்மக்கள் சார்பாகவும் இருந்தனர். இவ்வொப்பந்தம்பற்றியதானசரத்துக்கள் தற்போது கிடைக்கா விட்டாலும் இதன் உட்சாரம் பிரதிநிதித்துவம் பற்றியதாகவே அமைந்துள்ளது: அதாவது பிரிட்டிஷ் ஆட்சி காலத்தின் பொழுது சட்டசபையில் இலங்கையருக்கு பிரதிநிதித்துவம் வழங்கியிருந்தார்கள். இவ் வேளையில்தான் பிரதிநிதித்துவ எண்ணிக்கை குறித்து சிங்களத் தலைவர்கள் மத்தியிலும் தமிழ்பேசும் தலைவர்கள் மத்தியிலும் பிணக்குகள் எழுந்தன. சிங்களத் தலைவர்கள் தமது மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக அதிக பிரதிநிதித்துவம் கோரினார்கள் தமிழ்பேசும்மக்களின் தலைவர்களோ தமிழ் பேசுவோர் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருக்கின்றபடியால் அதிக எண்ணிக்கையில் பிரதிநிதித்துவம் கோரினர்கள். இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய, அரசியல் யாப்பு வழங்கிய சோல்பரி இலங்கைவரும் வரை இப் பிரதிநிதித்துவம் பற்றிய பிரச்சனைகளே தலைதூக்கியிருந்தது.

1919ல் மேற்கொள்ளப்பட்ட இவ்வொப்பந்தமானது எந்த விதமான மரியாதையும் காட்டாமல் கிழித்தெறியப்பட்டது. அதாவது 1921ல் கூடிய காங்கிரஸ் மகா சபையில் அதன் தலைவர் எஸ். ஜே. வி. பெரேரா என்பவரின் தலைமையுரையில் இவ்வொப்பந்தம் பற்றி கூறும் பொழுது "பரிசுத்தமான உள்ளக்கருத்தோடும் ஒருமைப்பாட்டை நிலைநிறுத்தும் எண்ணத்தோடும் தனிப்பட்ட அங்கத்தினர் சிலர் வடபகுதி நபர்களுடன் சேர்ந்து சில சமரச உடன்படிக்கைகளை செய்திருக்கலாம், ஆனால் காங்கிரஸிற்கு நான் மீண்டும் சொல்லுகிறேன் காங்கிரஸ் என்னும் ஸ்தாபனத்திற்கு இதைப்பற்றி ஒன்றும் தெரியாது" முதலாவது உடன்படிக்கை இப்படியாக கைவிடப்பட்டது.

## இரண்டாவது உடன்படிக்கை

"இந்த ஆலோசனைக் கூட்டம் பொருந்திக் கொள்ளுவதாவது சட்ட சபையை பொறுத்தவரையில் வடக்கு கிழக்கு மாகாண மக்களுக்கும், மேல் மாகாண இலங்கைத் தமிழர்களுக்கும் கொடுக்கப்படும் பிரதிநிதித்துவமும், வருங்காலத்தில் வகுக்கப்படும்அரசவமைப்பு சட்டத்தில் .ஒன்றுக்கு இரண்டு என்ற விகிதாசார அடிப்படையில் இப்பொழுது இருப்பது போல அமைந்திருக்க வேண்டும்" இரண்டாவது உடன்படிக்கையின் முதலாவது பத்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது இவ்வுடன்படிக்கை 1925ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வைத்துமேற்கொள்ளப்பட்டது. இவ்வுடன்படிக்கைக்காக திரு சி.இ. கொரியா தலைமையிலான சிங்கள பிரதிநிதிகளும், திருவாளர் வைத்தியலிங்கம் துரைசாமிஎன்பவரின் தலைமையிலான தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இவ்


(18ம்-பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழவர் இடர் தீர...



யாதும் ஊரே...
யாவரும் கேளிர்.

என்ற கணியன் பூங்குன்றனின் குரலை எதிரொலிக்கச் செய்ய வேண்டியவர்களாக உள்ளார்கள் இன்றைய ஈழத் தமிழர்கள். அவன் குரல், வெறும் பரந்த நோக்குப் பண்பாட்டுப்பண்ணல்ல; பதிலுக்குப் பட்டி தொட்டிகளில் வாழும் பாமர மக்களின் உள்ளக் குமுறலின் எதிரொலி என்பதை இன்றைய ஈழவர் தம் நிலையும், அவர்கள் சமூக பொருளாதாரச் சூழ்நிலையும், அரசியல் சூனியமும் எடுத்துக் காட்டுகின்றது. அதை ஆழமாக நோக்க வேண்டியது தர்க்கீக வாதிகளின் கடமை மட்டுமல்ல, பொறுப்புடன் உலகறியச் செய்ய வேண்டிய சுமையுமாகிறது.

## ஈழமும் ஈரோஸும் :

ஈழவர்தம் இன்றைய அவல நிலையை அந்நிய நாட்டுப் பத்திரிகைகளில் கூடப் படிக்கலாம்; ஆனால் இலங்கையிலுள்ள அரசுதரப்பு ஏரிக்கரைப் பத்திரிகைகளிலோ, அல்லது ''குணசேனக் கும்பல்'' பத்திரிகைகளிலோ படிக்க முடியாது. ஏன்? வம்சாவழி முதலாளியத்தின் எச்ச சொச்சத்தின் பிரதிபிம்பமான வீரகேசரியில் கூட விளக்கமான தகவல்களைப் பார்க்க முடியாது. அப் பத்திரிகைகளுக்கு மாரடிக்கும் நம்மவர்கள்கூட நையப்புடைக்கப் படவேண்டிவர்களாயுள்ளார்கள். இந்த அவ நிலை ஏற்படுமென தீர்க்கமாக உணர்ந்துதான், அதைத் தவிர்க்கவே, இலங்கைத் தமிழ் மக்களுக்கென உரிமைக்குரல் கொடுக்க ஒரு உச்சாணி ஏடு அவசியமென உணர்ந்து அதனூடாக சுதந்திரத்தை ஊட்ட ''சுதந்திரன்'' பத்திரிகையை நடாத்தி வந்தார் தந்தை செல்வா. ஆண்டுக்காண்டு ஆயிரக் கணக்கில் பொருளாதாரமுடை ஏற்பட்ட போதும் சளைக்கவில்லை சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம். இதனாலோ என்னவோ' சாதாரண சாமுவேல் ஜேம்ஸ் ''ஈழத்துக் காந்தி'' எனவும் தந்தை செல்வா எனவும் போற்றப்படுகிறார். இன்னும் இறந்தும் இறவா தலைவராக ஈழத் தமிழினத்தின் தலைவிதியை நிர்ணயிக்க வேண்டிய தலைவராக உள்ளார். அவரூட்டிய சுதந்திர தாகம் சுதந்திரன் பத்திரிகை வெளிவர முடியாத போதிலும் மடியவில்லை. ''வீர சுதந்திரம் வேண்டி நின்றோர் இனி வேறொன்று வேண்டுவரோ'' ''என்று தணியும் இந்த சுதந்திரதாகம்'' என பாரதி கேட்டதுபோல் கேட்டு, அதற்காக நிரந்தர விடை காணும் வரை ஈழவர்தம் அவல நிலையை துல்லியமாக நம்மவர்களுக்கும், உலகிற்கும் எடுத்துக்கூற வேண்டியவர்களாகவுள்ளோம். அந்தப் பொறுப்பு இன்று ஈழவர்களைப் பொறுத்தமட்டில் ''ஈழம்'' தம் பொறுப்பாகவும், உலகைப் பொறுத்தளவில் "EROS" இனதும் தலையாய கடமையாகிவிட்டது.

1983ம் ஆண்டு ஜூலைக் கலவரத்தின் பலாபலனாக இலங்கைத் தமிழர் பிரச்சனை உலகத்தின் கவனத்தை நன்கு ஈர்த்ததோடு மட்டுமல்லாமல் கணிசமான, கரிசனையும் பெற்றுக்கொண்டது. இந்த உலகளாவிய அனுதாபக் கரிசனையை இருட்டடிப்புச் செய்யும் நோக்குடன் இன்று சிறீலங்கா அரசு தீவிரமான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது. இதற்குச் சாதகமாக இலங்கைத் தமிழர் போராட்டத்தின் கொச்சப் பகுதியை மெச்சப்படுத்தி வருகிறது. இந்நச் சூழ்நிலையை எதிர்நோக்க வேண்டிய பொறுப்பு ஈழவர்தம், அதிலும் முக்கியமாக அயல்நாடுகளில் வாழும் ஈழவரின் தலையாய கடமையாகின்றது.

யாதும் ஊரே; யாவரும் கேளிர்; என்று ஊரையும் உலகையும் கூவிக் குமுறி அழைத்த புலவன் ''நன்றும் தீதும் பிறர்தர வாரா'' என்ற தர்க்கீகத் தார்ப்பரியத்தையும் கூறி வைக்கத் தவறவில்லை. அதனாலேயே ஈழவர்தம் எதிர்காலம் அவர்கள்தம் கையில்தான் உண்டு என வற்புறுத்தி வந்தோம். அதை இன்றைய சூழ்நிலை மேலும் வலியுறுத்துகின்றது.

## முரண்பாடுகள் :

இன்று இலங்கையில் ஈழத்தமிழ் மக்களின் சமூக பொருளாதார அரசியல் நிலையை எக் கோணங்களில் பார்த்தாலும் அஃகோணமாக படுமோசமான சூழ்நிலையில்தான் உள்ளது. இன்னும் தமிழர்களென்ற இனவாரி சமூக ரீதியில் வடக்குக் கிழக்கு மலையகம் என்று பிரதேசரீதியாக தொடர்பற்றும்; கொழும்பிலும், கண்டியிலும் ஏன் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் அகதிகளாக உள்ளார்கள்.

ஏனையோர் பாதுகாப்புப் படையின் பயங்கர கண்காணிப்பிற்குள்ளானார்கள். இவர்கள் பொருளாதார ரீதியில் பொறுப்பற்ற தலைமையினாலும், அரசுக் கெடுபிடிகளினாலும் எதிர் காலத்தை எஃக முடியாதவர்களாயுள்ளனர்.

www.tamilarangam.net

மலையகப் பாட்டாளிகளின் பிரச்சனை நாடு தழுவிய ரீதியில் தீர்க்கப்படாமையால் இவர்கள் இன அடிப்படையில் தம்மை இனங்காட்டி இனத்தின் விடுதலையையும் விமோசனத்தையும் நாடுவது இயங்கியல் நியதி.

இதனுல் அரசியல் ரீதியில் தலைமையில்லாத் தமிழினமாக் தத்தளிக்கிறது ஈழத்தமிழினம். இதனுல்தான் ஈழத்தமிழர்களின் போராட்டம் பற்றியும், போராட்டப்பாதை பற்றியும், தலைமை பற்றியும் திறனுய்வு செய்ய வேண்டியவர்களாகிருேம். இதனுலேயே தந்தை செல்வா **''இன்னும் இறந்தும் இறவாத தலைவராக ஈழத்தமிழினததின் தலைவிதியை நிர்ணயிக்க வேண்டியவராய் உள்ளார்''** என்ருேம். அதன் அடிப்படையிலேயே ஆரம்பத்தில் இருந்து ''தந்தைக்குப்பின் தளபதி தலைவராவாரா? எனக் கேள்விக் குரலெழுப்பி வந்தோம். தளபதியின் பேசக்கை எடுத்தெறிந்து பேசவும், அவர் தலைமையிலான வரம்பிற்குட்பட்ட கட்சியையும் அதன் பாதையையும் தூக்கி எறிய முற்பட்ட சக்திகள் கூட இன்று ஏட்டிக்குப் போட்டியாக ஒன்றுக்கொன்று முரண்பட்டுச் செயல்படுவது மட்டுமல்லாமல் முனைப்பான போராட்டப் பாதைய்யை வகுத்து மக்களை வழிநடாத்தத் தவறியவர்களாகிருர்கள். இங்கு மக்கள் போராட்டத்திற்கும், மக்களின் விடிவிற்காக விளையும் போராட்ட சக்திகளின் தந்திரோபாய முறைகளின் முரண்பாட்டையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

**அடிப்படை போராட்டம் என்பது என்ன ?**

முனைப்பு வேறு; எத்தனிப்பு வேறு. முழுமையான மக்கள் போராட்டத்திற்கு வழிகோல ஆழ்ந்த சமூக அரசியல் பொருளாதார அடிப்படையில் முன்னெடுக்கப்படும் பாதையே முனைப்பான பாதை. இப்பாதை முழுமை பெற வேண்டுமானுல் ஆயுதந் தாங்கிய மக்கள் போராட்டமாக அமைய வேண்டும். இது தவிர்த்து ஆழ்ந்த அரசியல் கொள்கைக் கோட்பாடின்றி, உளுத்த கோரிக்கைக்காக உதாசீனமாகவும் உதிரியாகவும் இராணுவ ரீதியில் விதண்டாவாதமாகஎடுக்கப்படும் நடவடிக்கைகளே எத்தனிப்பு. இந்நடவடிக்கையிலான போராட்ட சப்பவங்களை கோர்வையாகக் கொண்டதே ஈழப் போராட்ட வரலாறு. இதற்கும், மக்கள் அடிப்படையிலான போராட்டத்திற்கும் பாரிய வித்தியாசம் உண்டு. இதனுல் ஏற்பட்ட இன்னல்களையே இன்று ஈழத் தமிழினம் கண்டுகொள்ள நேரிட்டுள்ளது. இதனுலேயே ஈழவர் தம் இடர் தீருவதற்கு இதய நாதங்கள் துடிப்பது வெறும் துன்புறுத்தலால் மட்டுமல்ல துயரத்தால் தோய்ந்த ஒரு இயங்கியல் கதையினுலுங்கூட. இத்துன்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான முனைப்பான செயற்பாடுகளை போராட்ட சக்திகள் மேற்கொள்ள வேண்டும். இதற்கு உந்து சக்தியாக ''ஈரோஸ்'' தனது பங்களிப்பைச் செய்யும்.

''ஈழம்'' என்பது ஒரு இயங்கியல் நியதி என்பதை திரிகரண சுத்தியுடன் அறுதியிட்டுக் கூறும் ஸ்தாபனம் ''ஈரோஸ்''. ஆனுல் இதற்கான மார்க்கத்திலும் அடிப்படைக் கொள்கையிலும்தான் இதர போராட்ட சக்திகளின் வழிமுறைகளில் இருந்து மாறுபட்டுள்ளது. உதாரணத்திற்கு ''ஈழம்'' என்ற குறிக்கோளில் விஸ்தீரண எல்லை பற்றிய விளக்கம் குறித்து ஈரோசின் கருத்து தனித்தன்மையானது.

**வர்க்கக் கண்ணேட்டம் :**

ஒரு நாட்டின் சமூகப் பொருளாதார அரசியல் அடிப்படையில் அந்த நாட்டிற்கும் அந்நாட்டின் மக்களுக்கும் நிரந்தர விமோசனம் நாட விரும்புவோர் அந்நாட்டின் பிரச்சனையை வர்க்க அடிப்படையிலேயே அணுகுவர். அந்த ரீதியில் இலங்கையின் பாட்டாளி வர்க்கத்தின் முதுகெலும்பான மக்கள் மலையகத் தமிழ் மக்கள். இவர்களின் பிரச்சனை நாடு தழுவிய ரீதியில் தீர்க்கப்படாமையால் இந்த மக்கள் இன அடிப்படையில் தம்மை இனங்காட்டி இனத்தின் விடுதலையையும் விமோசனத்தையும் நாடுவது இயங்கியல் நியதி. இந்த அடிப்படையில்தான் இலங்கைவாழ் தமிழ் மக்களின் பண்டைய பாட்டாளிகளான மலையகத் தமிழர்களை மையமாக வைத்து முனைப்பான போராட்டத்தை முன்னெடுக்கும் இயக்கமே ''ஈரோஸ்''. மலையக மக்களையும் வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களையும் ஒன்றிணைத்துப் பிணைக்கும் சக்தியாக உருவாக்கப்பட்டதே ''ஈரோஸ்''. ஈரோசின் கொள்கை, கோரிக்கை சமுதாய நலன் கருதிய பிரகடனம் முன்வைக்கப்படவேண்டிய காலமிது. ஆகவே ஆரம்பத்தில் கூறியதுபோல் ஈழவர்தம் இன்றைய நிலையை துல்லியமாக நம் மக்களுக்கும், உலகுக்கும் எடுத்துக்கூற வேண்டியவர்களாகவுள்ளோம். அந்தப் பொறுப்பு ''ஈழம்'' இதழின் பொறுப்பாகி விட்டது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

( சென்ற இதழ் தொடர்ச்சி )

1964ம் ஆண்டிலிருந்து இயங்கி வரும் பாலத்தீனிய தேசிய சபையின் (PNC) 17வது கூட்டத் தொடர் சென்ற ஆண்டு நவம்பர் மாதம் 22ந் தேதி ஆரம்பித்து 28 வரை ஜோர்தான் தலைநகரமான அம்மானில் நடைபெற்றது. கடந்த ஒன்பது மாத காலமாக நடக்குமா? நடக்காதா? என்ற இழுபறி நிலையில் இருந்த இக்கூட்டத் தொடர் பல்வேறு பிரச்சனைகளுக்கிடையில் நடைபெற்று முடிந்துள்ளது. எனினும் நாமும் ஏனைய உலக முற்போக்கு அணியினரும் எதிர்பார்த்ததுபோல் தொடர் கூட்டம் நிறைவுள்ளதாக அமையவில்லை. ஒற்றுமையைப்பேண முடியாமற்போனது துன்பத்திற்குரியது.

பாலத்தீனிய விடுதலை இயக்கத்தின் முக்கியப் பங்காளியான அல்பத்தா மத்திய குழுவைத் தவிர ஏனைய பிரதான அணியினர் இதில் பங்குபற்றவில்லை. குறிப்பாக ஜோர்ஜ் கபாஸ் தலைமையிலான PFLPயும் NAYEF HAWATMEH தலைமையிலான DFLP, அகமட் ஜிப்றில் தலைமையிலான PFLP (General Command) ஆகியன இக்கூட்டத் தொடரை புறக்கணித்தன. மேலும் சிரியா சார்பான இப் பாலத்தீனிய தேசிய சபையின் தலைவரான காலித் பகூம் (Khaled Fahoum) கூட இதில் பங்குபற்றவில்லை. குறிப்பாகக் கூறினால் சிரியா, லிபியா போன்ற நாடுகளுக்கு ஆதரவான அணியினர் இக்கூட்டத்தொடரில் பங்குபற்றவில்லை எனலாம். சிரியத் தலைமைக்கும் பாலத்தீனிய விடுதலை இயக்கத் தலைமைக்கும் இடையே உள்ள பிளவு நிலை மேலும் அதிகரித்து இருப்பதனை இதன் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. அத்தோடு இத்தேசிய சபைக் கூட்டத் தொடரில் பங்குபற்றினால் திரும்பி நாட்டிற்குள் பிரவேசிக்க முடியாதென சிரியா தனது நாட்டிலுள்ள தேசிய சபைப் பேரவையினரை அச்சுறுத்தியதுபோல், இஸ்ரேல் தன்னால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்கு ஜோர்தான், காசா பகுதிகளில் உள்ள பேரவையினரை கூட்டத் தொடரில் கலந்து கொள்ள அனுமதிக்கவில்லை. இவ்வாறு [illegible] 120 பேர்கள் அநேகமாக அரபாத் ஆதரவாளர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

# பாலத்தீனிய போராட்டச் சிக்கல்கள் ஈழத்திலும் தொடரலாமா ?

இயக்கத்தில் அதி தீவிர போக்கினைக் கடைப்பிடிக்கும் தேசிய அணியினர் (National Alliance) (Fatah opposition Saiga, PELP-General Command, Popular Struggle Front) ஆகியன அரபாத் பதவி விலகினால் அன்றி கூட்டத்தில் பங்குபற்றுவது இல்லை என்று திட்டவட்டமாக கூறியிருந்தன. அதே சமயம் அரபாத்திற்கு எதிர்ப்பு என்ற வகையில் மிதமான போக்கினைக் கடைப்பிடிக்கும் சனநாயக அணி (Democratic Alliance-PFLP, DFLP, PCP, PCF) முக்கியமாக இரு காரணங்களைச் சுட்டிக்காட்டி இக்கூட்டத் தொடரைப் புறக்கணித்தது.

1. அம்மானில் கூடுவதைஇவ்வணியினர் கடுமையாக எதிர்த்தமை, அம்மானை அபாயகரமான இடம் என்று குறிப்பிட்ட இவர்கள் மத்திய கிழக்கில் அமைதி தொடர்பான ஐ நா. வின் 242வது தீர்மானத்தையும், றீகனின் திட்டத்தையும் தாம் நிராகரிப்பதாலும், அதே நேரம் ஜோர்தான் மன்னர் இதனை ஆதரிப்பதாலும், அம்மானில் கூடுவதை எதிர்ப்பதாகக் குறிப்பிட்டனர்.

2. ஏனைய விடுதலை அணியினருடன் இணக்கம் காணாமல் கூட்டத் தொடர் நடைபெறுவதை எதிர்த்த இவர்கள் ஏனைய அணியினருடன் இணக்கம் காணும் வரை இக்கூட்டத் தொடரை ஒத்தி வைக்கும்படி வேண்டுகோள் விடுத்திருந்தனர். ஆனால் இவற்றிற்கு மத்தியிலும் அல்பத்தா மத்திய குழுவோ 17வது கூட்டத் தொடரினை தாம் வெற்றிகரமாக நடாத்தியிருப்பதாக பிரகடனப்படுத்தியுள்ளனர். கூட்டத் தொடர் நடைபெறுவதற்கான கோரம் அதாவது 2/3 அங்கத்தினர் இதில் கலந்து கொண்டதாக இவர்கள் கூறியுள்ளனர். 384 பிரதிநிதிகளில் 250 பேருக்குமேல் இதில் கலந்துகொண்டதாகத் தெரிகிறது. எனவே இக்கூட்டத் தொடர் சட்ட ரீதியானது என ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிலையில் உள்ளது. பொதுவாகப் பார்க்குமிடத்து பாலத்தீனியப் பிரச்சனைகளும் விரைவான நீதியான தீர்வு காண்பதை பாலத்தீனிய மக்கள் விரும்புவதையும், அரபாத்தின் தலைமையை திரும்பவும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதையும் இக் கூட்டத் தொடர் விளக்குவதாக உள்ளது. மேலும் இக் கூட்டத் தொடரில் ஆதரவைத் தெரிவிக்கும் முகமாக பல விடுதலை இயக்கங்களும் பல உலக நாடுகளும் தமது பிரதிநிதிக் குழுக்களை இக் கூட்டத் தொடருக்கு அனுப்பி இருந்தமையும் கவனிக்கத் தக்கன.



## அராபாத் மீண்டும் தெரிவு

இக் கூட்டத்தொடரின் தாக்கத்தினை அறிவதற்கு இதில் எடுக்கப்பட்ட சில முடிவுகளை குறிப்பிடுவது அவசியமாகின்றது. இதில் மீண்டும் ஏகமனதாக அரபாத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். 55 வயதான இவர் தனது 15 வருடத் தலைமையை மீண்டும் உறுதிப் படுத்திக்கொண்டார். இவரது தலைமைக்கான தேர்வு, சிரியாவுடன் நட்புறவை வளர்க்கவும், மேற்கு ஆசியாவில் அமெரிக்க இசுரேலிய கூட்டு பயங்கரச் செயல்களை முறியடிப்பதற்குமாகச்செய்யப் பட்டதெனபாலத்தீனியதேசிய சபையின் அரசியல் அறிக்கை கூறுகின்றது. அதேசமயம் இன்னொருவிட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தியை சோவியத்தும் ஏனைய சோசலிச நாடுகளும் ஏற்கனவே புலப்படுத்தியுள்ளன. பாலத்தீனிய தேசியசபைக் கூட்டத்திற்கு தமது முழு அளவிலான பூரணப்படுத்தப் பட்ட பிரதிநிதிகளை இவர்கள் அனுப்பவில்லை.

## ஒற்றுமை ஏற்படுமா?

இத்தகைய நிலையிலும் ஒற்றுமைக்கான முயற்சிகள் தொடர்கின்றன. ஜோர்ஜ்கபாஷ் குறிப்பிட்டது போல் ''அம்மானில் நடைபெற்ற கூட்டத் தொடரோடு எல்லா விஷயங்களும் முடிவுக்கு வந்ததாகக் கருதத் தேவையில்லை'' (The Metting in Amman is not the end of the world) அதுமட்டுமின்றி கபாஷ் அங்கம் வகிக்கும் சனநாயகக் கூட்டணி ஒற்றுமையை பேணுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதோடு சில அம்சங்களைத் தெளிவுபடுத்தியும் உள்ளது. இவ் அணியானது அல்பத்தா மத்தியகுழுவோடு தமக்குத் தகராறு இருந்த போதிலும் பாலத்தீனிய விடுதலை இயக்கத்திற்கு போட்டியாகவோ அல்லது அதற்குப் பதிலாகவோ இன்னொரு இயக்கம் உருவாக தாம் காரணமாகவோ அல்லது அத்தகைய வேறு முயற்சிகட்கு உறுதுணையாகவோ இருக்கமாட்டோம் என உறுதிபடக்கூறியதுமட்டுமின்றி மீண்டும் பாலத்தீனிய இயக்கத்தினை சீர்படுத்த முனைவது மகிழ்ச்சிக்குரிய விடயமே. இணக்கம் கூடிய விரைவில் ஏற்படா விடினும் அதற்கான முயற்சிகள் வெற்றியளிக்கும் என திடமாக நம்பமுடியும். இதற்கான பிரதான காரணம் ஒன்றை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

பாலத்தீனிய விடுதலை இயக்கம் ஒரு முகப்பட்டு ஒரு புரட்சிகர சக்தியாக மேற்காசியாவில் உருவெடுப்பதை சில அரபுநாடுகள் விரும்பவில்லை. என்பது வெளிப்படையான விடயம். எனவே பாலத்தீனிய இயக்கம் பிளவுண்டால் போராடும் அணிகள் மிகக் கூடியளவில் அரபு நாடுகளில் தங்கியிருக்க வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்படும். இதன் மூலம் பாலத்தீனிய போராட்டத்தின் புரட்சிகர தன்மை மழுங்கடிக்கப்படும். இதனை உண்மையிலே வேறுபாடுள்ள பாலத்தீனிய இயக்கம் எதுவுமே விரும்பவில்லை. இதன் அடிப்படையிலேதான் ஒற்றுமையின் அவசியம் வலியுறுத்தப்படுகிறது கருத்து வேறுபட்டு நிற்பதால் ஏற்பட்டுள்ள தேக்கநிலை மாறி ஒருமுகப்பட்டு அமெரிக்க-

## சியோனிசத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்டாலே ஈழப்புரட்சி வெற்றியடையும்

சியோனிசகூட்டுச் சக்திகளைமுறியடித்து, மனித நேயத்திற்கும், கௌரவத்திற்குமாக போராடும் உலக புரட்சிகர இயக்கங்களின் பணியை இலகுவாக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றோம். சியோனிசத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்டாலே ஈழப்புரட்சியும் வெற்றியடையும் என்பதை இக் கட்டத்தில் நாம் மனங்கொள்ளுதல் பொருத்தமானது.

## PLO வின் எதிர்காலம்

மீண்டும் தலைமைப பதவியை உறுதிப்படுத்தியுள்ள அரபாத் பாலத்தீனியரின் நல்வாழ்க்கைக்கு எவ்வாறு உறுதி சொல்லப் போகிறார்? அவர்களது விடிவுக்கு எவ்வாறு வழி வகுக்கப்போகின்றார்? என்பதே இன்றுள்ள மிகப் பெரிய வினாவாகும். அவரது எதிர்பாளர்கள் அவரது ஒவ்வொரு நடவடிக்கையையும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றார்கள். பாலத்தீனியப் புரட்சிக்கு அவர் துரோகம் இழைக்கின்றார், ஆயுதப் போராட்ட வழியைக் கைவிட்டு வீண் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு காலம் கடத்துகின்றார் போன்ற குற்றச்சாட்டுகள் தற்போது எழத் தொடங்கியுள்ளன உண்மையிலே இவை தொடர்பாக அரபாத்தின் நிலை என்ன? மிகவும் இக்கட்டான சூழ் நிலையிலும் விடா முயற்சியோடு பாலத்தீனிய தேசிய சபையைக் கூட்டி தனது எண்ணங்களை நிறைவேற்றக் கூடிய வகையில் அமைந்த நிறைவேற்றுக் குழுவை அமைப்பதில் அரபாத் வெற்றி பெற்றுள்ளார். இனி அடுத்தது என்ன? இணக்கமான பேச்சு வார்த்தையில் இவரது இராசதந்திர நடவடிக்கைகள் மூலம்பாலத்தீனத்தை மீண்டும் உருவாக்க முடியுமா? அதாவது மேற்கு ஜோர்தான், காசா பகுதிகளை இணைத்து ஒரு பாலத்தீனிய தாயகத்தை உருவாக்கி, அதுமட்டுமின்றி கோலான் குன்றுகளைக் கூட சிரியாவுக்கு பெற்றுக் கொடுக்க முடியுமானால் அரபாத்தின் தலைமை உச்சமடைவதை யாராலும் தடுக்க முடியாது. ஆனால் இவையெல்லாம் சுலபமாக நடக்கக் கூடியவையா? அமெரிக்காவும், அதன் எடுபிடியான இசுரேலும் இதற்கு இணங்குமா? இங்குதான் அரபாத்தின் திட்டம் வெளிப்படுகின்றது. எகிப்தோடும், ஜோர்தானோடும் நல்லுறவுகளை ஏற்படுத்துவதன் மூலம் அமெரிக்கா மூலமாக இசுரேலுக்கு தாக்கத்தினை ஏற்படுத்த அரபாத் விரும்புகின்றார். அமெரிக்கா வோடு இந் நாடுகள் தொடர்புகளை வைத்திருந்தாலும் அரபு உலகில் இருந்து இவற்றால் முற்றாகத் துண்டித்துக் கொள்ள முடியாது.

மேலும் லெபனானில் இருந்து வெளியேறிய பின்னர் பொருத்தமான அரசியல் தளமொன்றினை பெறவேண்டிய நிலையும் அரபாத்திற்கு ஏற்பட்டுள்ளது. இவ்வகையில் இந்நாடுகளைப் பயன்படுத்த அரபாத் விரும்புகிறார் என்பது வெளிப்படை எனவே சில குறிக்கோள்களை முன்வைத்து சில அரசியல் முயற்சிகளில் அரபாத் ஈடுபட்டு இருக்கின்றார். அதற்குச் சாதகமான சில புறச் சூழ்நிலைகளையே PNCயின் 17வது கூட்டத் தொடரில் அவர் உருவாக்கியுள்ளார். ஆனால் இது மட்டும் போதுமா? ஏனெனில் மிகுந்த பகை முரண்பாடுகள் நிரம்பியுள்ள அரபு உலகை பின்புலமாக வைத்து பணியாற்றுதல் மிகச் சிரமமான காரியம். ஜோர்தானின் உதவியைப் பெறமுயலும் அதே சமயத்தில் ஜோர்தானோடு கூட்டுச் சேர்ந்து இருக்கின்றார் என்ற அவப் பெயர் உருவாவதையும் தடுக்க வேண்டிய நிலை. ஏனெனில் 1970ம் ஆண்டில் ஆயிரக்கணக்கான சக தோழர்கள் ஜோர்தான் மண்ணில் மடிந்ததை PFLP, DFLP போன்றவை மறக்கவோ, மன்னிக்கவோ தயாராக இல்லை, பாலத்தீனிய விடுதலை இயக்கத்திற்கு மறைமுகமாக உதவும் சில அரபு நாடுகளுக்கும் தான் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடவில்லை என்று நிரூபிக்க வேண்டிய அதே நேரத்தில் இணக்கமான பேச்சு வார்த்தைகளுக்கும் தான் தயார் என்று ஐ.நா. அமெரிக்கா, இசுரேல் போன்ற நாடுகளுக்கும் அவர் காண்பிக்க முயல்கிறார். அதே போலவே ஈரானின் முழு ஆத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரவைப் பெற்று இருப்பதற்காக ஈராக்கைப் பகைக்க முடியாது. அத்துடன் சவூதி அரேபியா, குவைத் போன்ற பிற்போக்கு நாடுகளிடம் இருந்து கிடைக்கும் உதவிகளை முற்றாகப் புறக்கணிக்க அரபாத் விரும்பவில்லை.

மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் நல்லுறவையும் பாலத்தீனியர்பால் நல்லெண்ணத்தையும் வளர்க்கும் அதே வேளையில் சோவியத்தோடும் அதன் நேச அணிகளோடும் மேலும் இறுக்கமான தொடர்புகளை அரபாத் பேண முயற்சிக்கிறார். குறிப்பாக அரபு உலகில் இருந்து வெளியேற்றப்பட்ட எகிப்துடன் அவர் ஏற்படுத்துகிற உறவும் இத்தகையதே, எனவே இத்தகையதொரு இக்கட்டான சூழ்நிலையில் அரபாத் செயற்படுவது இந்நிலையினைக் கையாள்வதற்கு அரபாத்தே பொருத்தமானவர் என்று ஆண்டாண்டு காலமாக அகதிகளாய் வாழும் பாலத்தீனியர் விரும்புவதும் புலப்படுகிறது.

காம்ப்டேவிட் உடன்படிக்கையில் இருந்து எகிப்தைப் பின்வாங்கச் செய்து அதனை மீண்டும் அரபு உலகின் நண்பனாக மாற்ற முடியுமா? இவ்வாறு செய்வதன் மூலம் எகிப்திற்கும் சிரியாவுக்கும் இடையில் உள்ள பகைமை காரணமாக அரபாத்தின் தலைமையை மேலும் வன்மையாக சிரியா எதிர்ப்பதைத் தடுக்க முடியுமா? இவற்றுக்கு எல்லாம் காலமே பதில் கூறும்.

இவ்வாறு பலத்த சந்தேகங்களை எழுப்பக் கூடிய முயற்சிகளில் கத்திமேல் நடப்பது போன்ற ஒரு போராட்டத்தில் அரபாத் ஈடுபட்டுஇருக்கின்றார். இம்முயற்சியில் ஈடுபட்டு இருப்பதால் அரபாத் போராட்ட வழிமுறைகளை கைவிட்டு விட்டார் என்று பொருள்படுமா? ஆம் என்று கூற அவரது எதிர்ப்பாளர்களே தயங்குகின்றனர். அரபாத்தின் வாழ்க்கை முறையைப் பூரணமாக அறிந்தவர்கள் அவர் தனது கொள்கைகளில் இருந்து பின்வாங்கமாட்டார் என்றே உறுதிபடக் கூறுகின்றனர்- பாலத்தீனிய மக்களின் விடிவிற்காகவே தனது வாழ்க்கையைப் பணயம் வைத்துச் செயற்படும் அரபாத், சியோனிச, சி.ஐ.ஏ. கூட்டத்தினரின் கொலை முயற்சியில் இருந்து தப்பிய அந்தப் போராளி பாலத்தீனியப் புரட்சிக்கு எக்கால கட்டத்திலும் துரோகம் இழைக்க மாட்டார் என்று நாம் உறுதியாகநம்புகிறோம். மீண்டும்தலைவராகத்தெரிவு செய்யப்பட்டபின் அரபாத் கூறியமுதற்கூற்று இது தான். "எமது தாயகத்தை- பாலத்தீனத்தை - யெருசலேத்தை அடையும் வரை ஆயுதம் தாங்கிய எமது பாதையை நாம் நிராகரிக்கப் போவதில்லை, ("I pledge and vow to my people that we shall keep along the path carrying our guns- and despite all plots and difficulties until we return to Palestine to Jerusalem )

நாங்கள் போர்புரியும் நோக்குடன் போர் புரியவில்லை. அடக்குமுறைக்கும் ஆக்கிரமிப்பிற்கும் எதிராக பிரயோகிக்கக் கூடிய சகல வழிமுறைகளையும் கையாண்டு அதனை எதிர்ப்பதை சர்வதேச சட்டமே ஏற்றுக் கொள்கிறது. ("We do not fight for the sake of fighting- but International law says those who face occupation should confront occupation and resist with all means available"). எதிர்வரும் காலத்தில் இசுரவேலுக்கெதிரான ஆயுதப் போராட்டம் மேலும் துரிதப்படுத்தப்படும் ("The Palestinian Leadership wculd stepup the armed struggle against the Israle presence in the occupied territories") என்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வுடன்படிக்கை அக்காலத்தில் ''மகேந்திர உடன்படிக்கை'' எனப் பெயர் பெற்றது. ஏனெனில் மகேந்திரா என்று அழைக்கப்படும் வைத்தியலிங்கம் துரைசாமி அவர்களின் வீட்டிலேயே இவ்வுடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இவ்வுடன்படிக்கை 1925 காங்கிரஸ் மகா சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் இவ்வுடன்படிக்கை அக்கூட்டத்தில் ஏற்கப்படவுமில்லை. நிராகரிக்கப்படவுமில்லை. அடுத்த கூட்டத்திற்கு ஒத்திப்போடப்பட்டது. அடுத்த கூட்டத்திலும் இவ்வுடன்படிக்கை நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படாமலேயே விவாதத்திற்கு எடுக்கப்பட்டு ''நாட்டிலுள்ள சகல சமூக சங்கங்களின் அபிப்பிராயத்தை அறியும் வரை இந்த விசயத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதில்லை'' என்ற தீர்மானத்துடன் இவ்வுடன்படிக்கையும் கைவிடப்பட்டது.

## மூன்றாவது உடன்படிக்கையும் துரோகமும்

சோல்பரிக் கமிஷன் இலங்கைக்கு வரும் கால கட்டத்தில் இலங்கை சட்டசபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது. சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளுமே அரசு செயலாக்க மொழிகளாக இருக்க வேண்டும் என அத்தீர்மானம் கூறியது. இதன் அடிப்படையிலேயே சோல்பரிக் கமிஷன் இலங்கைக்கான அரசியல் அமைப்பையாத்தது. அதில் தமிழ் பேசும் மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் 29வது சரத்தையும் இயற்றியிருந்தது. இதன்படி இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டு ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியை அமைத்தது. திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா ஐ.தே.க. இருந்து விலகி சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அமைத்திருந்தார். அதற்கு முன்னால் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டார நாயக்கா, சிங்கள மகாசபைக் கூடாக மொழி பற்றியும் மதம் பற்றியதுமான இரண்டு தீர்மானங்களையும் அரசுக்கு அனுப்பியிருந்தார். அத்துடன் நாடு முழுவதும் பண்டார நாயக்கா அவர்கள்சிங்களத்தை மாத்திரம் அரச செயலாக்க மொழியாக்குவேன் என்று பறைசாற்றினார். உடனே ஐக்கிய தேசியக் கட்சி அவசர அவசரமாக களனியா வில் மகாநாட்டைக் கூட்டிதாமும் சிங்களத்தைமாத்திரமே உத்தியோக மொழியாக செய்வோம் என தீர்மானம் செய்தது. இதன் பின்னணியில் 1956ம் ஆண்டு பாராளுமன்றத்தில் ''தனிச் சிங்களம் மட்டும்'' சட்டம் கொண்டு வரப்பட்டது. இவ்வாண்டை தமிழ் பேசும் மக்கள் இன்றும் நினைவில் வைத்திருக்கிறார்கள். ஏனெனில்இதன் பின்னாலேயே இலங்கையின் வரலாறு பல மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

## நான்காவது உடன்படிக்கை

சோல்பரிக் கமிஷன் சட்டசபைக்கான பிரதிநிதித்துவம் குறித்து 58 : 42 என்ற விகிதாசாரத்தை பரிந்துரை செய்ததுடன் 75,000 மக்களுக்கும் 1000 சதுர மைல் நிலப்பரப்பிற்கும் ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையையும் சிபாரிசு செய்தது. இது தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளுக்கு திருப்தி அளிக்கவில்லை. ஆனால் இதனை எப்படி எதிர்ப்பது என்றும் அவர்கள் வழிகாட்டவில்லை. தமது கண்டனங்களை தெரிவித்து வந்தனர். டி.எஸ். சேனநாயக்கா, திரு மோலமூரே இன்னும் பல சிங்களத் தலைவர்கள் ''எங்களை நம்புங்கள்'' என வேண்டுகோள் விடுத்தனர். இந்த விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் அரசமைப்பு சாசனத்தில் சேர்க்கப்படாமல் சாதாரண பெரும்பான்மை வாக்குகளால்மாற்றக் கூடிய தேர்தல் சட்டத்தில் அமைக்கப்பட்டிருந்தது. இதனை அறியாத தமிழ்த் தலைவர்கள் அவர்களது வாக்குமூலத்தை ஏற்று சிங்களவர்களோடு ஒத்துழைத்தார்கள். ஆனால் சோல்பரித்திட்டத்தை ஏற்றுக்கொண்டதன் பின்பு புதிய பாராளுமன்றத்தில் செய்யப்பட்ட முதலாவது வேலை இலங்கை பிரஜாவுரிமை சட்டத்தை இயற்றியதேயாகும். அத்துடன் தேர்தல் சட்டமும் திருத்தப்பட்டது. இதன் வெளிப்பாடு தமிழ் மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. தமிழர்கள் வாக்காளர் இடாப்பில் இருந்து நீக்கப்பட்டார்கள். 58:42 என்ற விகிதாச்சாரமும் குழிதோண்டி புதைக்கப்பட்டது. இப்படியாக எங்களை நம்புங்கள் என்ற வாக்குறுதி காற்றிலே பறக்க விடப்பட்டது. இலங்கை அரசியல் யாப்பை யாத்த சேர். ஐவர் ஜெனிங்ஸ் 1960ல்பி.பி.சி. இல் பேட்டி அளிக்கும்போது ''தனக்கு இப்போது (1960) இருக்கும் அனுபவம் அன்று 1945ம் 1956ம் ஆண்டுகளில்இருந்திருந்தால் இலங்கையின் அரசமைப்புசாசனம் வேறுவிதமாக அமைந்திருக்கும் இதற்கு நான் வருந்துகிறேன்'' என்றார்.

## ஐந்தாவது உடன்படிக்கை (பண்டா செல்வா உடன்படிக்கை)

1956ம் ஆண்டு தனிச் சிங்கள சட்டம் கொண்டுவரப்பட்டதானது தமிழ் பேசும்மக்களைத் தீவிர சிந்தனைக்குள்ளாக்கியது. தங்கள் மொழியூடான தம் தனித்துவத்தை பேணிக்காக்க விரும்பினர். அப்போதைய தமிழ்பேசும் மக்களின் தலைமையான தமிழரசுக்கட்சி தனது மகாநாட்டை திருமலையில் கூட்டியது. இம்மகாநாட்டின் தீர்மானத்தின்படி ''இந்த மகாநாடு மேலும் வெளியரங்கப்படுத்துவதாவது 1957ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20ம் திகதிக்கு முன்னதாக இலங்கையிலே சமஷ்டி அமைப்பு முறையில்அரசு நிறுவுவதற்கு பிரதமமந்திரியும் பாராளுமன்றமும் நடவடிககை எடுக்க தவறுவார்களானால் தமிழரசுக்கட்சி தமது இலட்சியத்தை அடைவதற்கு நேரடி நடவடிக்கையில் இறங்கும் என அறிவித்தது இவ்வறிவிப்பின் படி தமிழ் பேசும் மக்கள் தயாரிக்கப்பட்டனர். இந்நிலைமையில் அரசுக்கும், தமிழரசுக்கட்சிக்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது. முடிவில் 1957 யூலை 27ல் பிரதம மந்திரியின் செயலகத்தில் வைத்து பிரதமமந்திரி. திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும், தமிழரசுக்கட்சித் தலைவர். சா. ஜே. வே. செல்வநாயகமும் உடன்படிக்கைமேற்கொண்டனர். ஆனால் இந்த உடன்படிக்கையும் கிழித்தெறியப்பட்டு, சிங்கள பேரினவாதத்துக்குள் மூழ்கடிக்கப்பட்டது.

## ஆறாவது இரகசிய உடன்படிக்கை!

1965ம் ஆண்டு இலங்கை முழுவதற்குமான தேர்தல் நடந்து முடிந்த பொழுது ஆட்சி அமைப்பதில் இழுபறி ஏற்பட்டது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசியக்கட்சியும், தமிழ் பேசும் மக்களின் அதிக பிரதிநிதித்துவம் பெற்ற தமிழரசுக் கட்சியுடன் பேரம்பேசத் தொடங்கின. ஏற்கனவே பேச்சுவார்த்தைகள். உடன்படிக்கைகள் பற்றி படிப்பினைகள் பெற்றிருந்தும் தமிழரசுக்கட்சியும் இப்பேரங்களுக்கு இணங்கியது. இவ்வேளையில்த்தான் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலத்தின் விமோசனதித்திற்கான வழியைப்பற்றி ஆராயாமல் ஆட்சிப் பீடத்திற்கும், பதவி நாற்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலிக்கும் சோரம் போனார்கள் தமிழரசுக் கட்சியினர். ஐக்கிய தேசியக் கட்சியுடனான பேரம் வெற்றியளித்ததை தொடர்ந்து ஆட்சியில் மந்திரி பதவியும் பெற்றுக் கொண்டனர். ஐக்கிய தேசியகட்சித் தலைவரான திரு டட்லி சேனாநாயக்காவுக்கும், தமிழரசுக்கட்சித் தலைவர். திரு செல்வநாயகத்திற்கும் இடையில் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ்வுடன் படிக்கைகள் இரகசியமாகவே வைக்கப்பட்டன. 1968ல் தமிழரசுக் கட்சி தனது மந்திரி பதவியைத் துறந்து அரசுக்கூட்டிலிருந்து வெளியேறினார்கள். இவ்வாறு டட்லி, செல்வா இரகசிய உடன்படிக்கையும் காலாவதியாகியது.

### ஏழாவது பேச்சு வார்த்தை!


1983 க்கு பின் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனையானது இன்னொரு பரிணாமக்கட்டத்தை எட்டியது. யூலைக்கலவரமானது ஈழவர்களை மோசமாகப் பாதித்திருந்தது; வாழ்நிலையிலேயே மாற்றம ஏற்பட்டது; உலக அரங்கில் ஈழப் பிரச்சனை எதிரொலிக்கத் தொடங்கியது. அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்தும்படி சிறிலங்கா அரசை உலக நாடுகள் நிர்ப்பந்தித்தன. 1984ல் பேச்சு வார்த்தை தொடக்கப்பட்டது. சிறிலங்கா அரசும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன. இந்தியா கண்காணிப்பாளராக கடமையாற்றத் தொடங்கியது. சமரச தீர்வுக்கு தயாரில்லாத சிறிலங்கா அரசு இராணுவத் தீர்விலேயே நம்பிக்கை கொண்டவர்களாய் தனது இராணுவ பலத்தை பெருக்கிக் கொண்டு ஈழவர்களை கொன்று குவித்ததோடு பேச்சு வார்த்தையையும் தீர்வுக்கு கொண்டுவராமலேயே இழுத்தடித்துக் கொண்டது. இறுதியில் கடந்த கால அனுபவங்களைப் போலவே பத்து மாத கால பேச்சு வார்த்தை முறியடிக்கப்பட்டது. கிராம சபை, அரசியல் சபை என ஏராளமான சபைகளை முன் வைத்த ஜே. ஆர். எந்தத் தீர்வையும் முன் வைக்காமலேயே இனிப் பேசுவது இல்லை என்று முற்றுப்புள்ளி வைத்தார். பேச்சு வார்த்தை உடன்படிக்கைகளின் வரலாறு 1919 தொடக்கம் 1985 வரை இப்படியாக முடிவு பெற்றது.

இந்த வரலாற்று பின்னணியுடன்தான் நாம் எதிர் கால நடவடிக்கைகள் குறித்து சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

எந்தக் காலத்திலும் அரசியல் வரையறைக்குட்பட்டதான அரசியல் தீர்வொன்றுக்கு சிறிலங்கா அரசும் சிங்களப் பேரினவாதமும் தயாரில்லை என்பதனையே குட்டிக்குட்டி சொல்லியிருக்கின்றார்கள்.

எனவே இராணுவ ரீதியாக எம்மைப் பலப்படுத்துவதும் முழுமக்களையும் போராட்டத் தயாரிப்புக்கு அணி திரட்டுவதுமே இப்போது நாம் செய்ய வேண்டியதாகும்.

## ஈழத் தேசிய விடுதலை முன்னணி (E. N. L. F.)




வரலாறு கற்றுத்தரும் பாடங்கள் என்றும் எம்மைச் செழுமைப்படுத்தியே செல்லவேண்டும். கடந்த வருடம் ஏப்ரல் மாதம் சில அடிப்படை வேலைத் திட்டங்களுக்கு அமைய இணைந்த விடுதலை இயக்கங்கள் அனுபவ விமர்சனங்களுக்கூடாக தம்மை மேம்படுத்தி பொதுப்பெயரில் இயங்குவதற்கு இன்று இணக்கம் கண்டுள்ளன.

பேரினவாத அரசின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளினால், உயிரிழந்தும், உடமைகளை இழந்தும் ஈழவர் அகதிகளாய் அயல்நாடுகளுக்கு ஓடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் ஈழவர் விடுதலையை முன்னெடுத்துச் செல்லும் அமைப்புக்களும் போராளிகளும் ஒற்றுமையுடனும், புரிந்துணர்வுடனும் செயற்பட வேண்டியது அவசியமாகின்றது. இதற்கமைய இணைப்பை மேலும் இறுக்கமாக்கும் வகையில் ''ஈழத் தேசிய விடுதலை முன்னணி'' என்ற பொதுப்பெயர் வழங்கப்பட்டுள்ளது.

பிற்போக்கு சக்திகளின் துணைகொண்டு எதிரி தன்னை மிக வேகமாகப் பலப்படுத்திக்கொண்டிருக்கும் இவ்வேளையில் நாம் உதிரியாய் தனித்தனியே செயற்படுவது எமது இனத்தின் அழிவிற்கு மேலும் வழிகோலும். போராட்டப் பாதையின் கடந்த கால அனுபவங்கள் நமக்கு அளித்த பாடங்களிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது இதுவே.

ஈழவர் விடுதலையை வேண்டி நிற்கும் சகல அமைப்புக்களையும் நாம் வேண்டுவது யாதெனில் அவதியுறும் எம் மக்களின் இன்னல் தீர்ந்திட நமது பகைமை முரண்பாடுகளைக் களைந்து E. N. L. F. உடன் இணைந்து ஒருமைப்பட்டு மக்கட் படையைத் தயாரிக்க முன்வருவோமாக.

( ஒன்றுபடுவோம் — போராடுவோம் — ஒன்றுபடுவோம் )



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உழவர்: வரலாற்றுப் பின்னணி

தேசிய இன விடுதலைக்கான எமது போராட்ட பாதையில் முன்னணிப் பிரிவினரான உழவர்களையும் அரவணைத்தே நமது இலட்சியத்தை வென்றெடுக்க முடியும் என்பதில் அசையாத நம்பிக்கையைத் திருக்கிறோம். எமது அடிப்படைப் பிரச்சனைகளோடு பிணைந்துள்ள உழவர்களின் துன்பங்களை இந்நேரத்தில் பகிர்ந்து கொள்ளல் அவசியம் எனக் கருதுகிறோம். அப்போது தான் ஈழவரின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் வெற்றுப் பேச்சாக்காமல் நிதர்சனமாக்க முடியும்.

**சமுதாய வளர்ச்சி :**

கூட்டங்கூட்டமாக சேர்ந்து வாழ்ந்த மனிதன் கிடைப்பதை உண்டான். அனைத்தும் பொதுவாகவே இருந்தன. அவனது ஆயுதங்கள் கற்களால் ஆன கருவிகளே. கற்குகைகளே அவனது வதிவிடங்கள். இயற்கை அவனுக்கு அறிவை ஊட்டியது. அனுபவம் அவனுக்கு ஆற்றலை வளர்த்தது. இந்நிலையிலே பழக்கவும்-பழக்கியபின் வளர்க்கவும் கூடிய மிருகங்களை அவன் கண்டுகொண்டு அவற்றின் உணவு தேடி புல்வெளிகளை நாடினான். இவ்விடங்களைத் தேடி அலைவதன் மூலம் நாடோடியானான். கூட்டங்களாக இருந்த மனிதன் தன் தேவையின் நிமித்தம் பிரிந்து செல்ல வேண்டியதாயிற்று. வேட்டையாடி கையில் கிடைத்த காய் கனிகளை உண்டு மகிழ்ந்த மனிதன் அவற்றைத் தானே உண்டாக்க முடியுமென்பதைக் கண்டான் அவனது வாழ்வில் விவசாயம் புகுந்துகொண்டது. தனது பயிர் நிலங்களுக்குப் பக்கத்தில் அவன் நிரந்தரமாகத் தங்க வேண்டியதால் குடில் அமைக்கக் கற்றுக்கொண்டான். கருவிகள் செய்தான். நிலத்தைப் பண்படுத்தினான். மேலும் மேலும் அந்நிலத்திலே பயிரிட்டு பயன் பெற்றதால் இதுவே அவனது பழக்கமானது.

சமூக வளர்ச்சியும் வழிபாடும் வாழ்க்கையுடன் இணையத் தொடங்கியது. கால் நடைகள் செல்வங்களாயின. பயிர்ச் செய்கையும் வளர்ச்சியடைந்தது. பண்டமாற்று முறை புகுந்து நிலம் பங்கிடப்பட்டது. சிலர் சொத்துடையவராயினர். வர்க்கங்கள் உருவாகத் தொடங்கின. சமுதாயம் முரண்பட்ட இரு அணிகளாகப் பிளவு படத் தொடங்கியது. இந்தப் பின்னணியிலேயே உழைப்புக்கு விழா உருவானதை நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

பயிர்ச் செய்கையில் நெல் [illegible] செய்யும்போது [illegible] பங்கிட்டு உண்டனர். "[illegible]யவை எல்லாம் உழைத்தவனுக்குச் சேர்வதில்லையே". அவை ஒரு சிலரின் கைகளுக்குள்ளேயே முடக்கப்பட்டன. உழைப்பவனுக்கு காரணம் கற்பிக்கத் தொடங்கினான். உன் உழைப்பினால் இது உருவாகவில்லை. ஆண்டவன் தான் இவற்றைப் படைத்தான். உருவாகும் அனைத்துமே அவனுக்குத்தான் சொந்தம் எனக் கூறி உழைப்பை இழிவாக்கி அதன் உயர்வை மறைத்து உழைப்பவர் சிந்தனையை வேறு திசைக்கு மாற்றி விட்டனர். பயிருக்கு சூரிய சக்தி அவசியம் என்பதை உணர்ந்து—அதற்கு மதிப்பளிப்பதை — சாமிக்கு படை என்றனர். ஒரு சிலர் சூரியனை இயக்குபவன் அவன் தான் எனக் கற்பித்தனர். உழவர் விழா சமய விழாவாக மாறத் தொடங்கியது. இந்துக்கள், சைவர்களின் சாமிக்குப் படைத்தல் என்னும் சடங்கு நிகழ்ச்சி—அறுவடை செய்து பொங்கி உண்டு களித்தல், சாமிக்கு படைத்து உண்ணுதல் என்னும் சடங்காக மாற்றப்பட்டது. ஒரு மொழி பேசுவோர் மத்தியில் பிரிவினை வளர்ந்து பாரம்பரிய [illegible]ச்சாரங்கள் பண்பாடுகள் மறுக்கப்பட்டன. அவற்றை மதச் சடங்குகள் என ஒதுக்கினர். உழவர் விழா தனியொரு மதத்தினருக்கான விழாவாக மாற்றப்பட்டது

ஸ்ரீலங்காவை விட்டு வெள்ளையர் வெளியேறு முன்பே ஈழ விவசாயிகள் பலவிதமாகப் பாதிக்கப்பட்டார்கள். இதனைத் தொடர்ந்து ஆட்சி மாறிய பின்பும் பயிர் செய்கைக்கான வசதிகள் எதையும் தராமல் ஸ்ரீலங்கா அரசு ஈழ விவசாயிகளை ஒடுக்கியது. மூதூர் அல்லைக் குளத்தையும், பெருவள்ளிக் குளத்தையும் புனரமைத்துக் கொடுக்காமல் காலங்கடத்திவரும் அரசானது சிங்களப் பகுதிகளிலுள்ள நீர்ப்பாசன குளங்களை புனரமைத்துக் கொடுத்துள்ளது. இதேபோல் வடக்கு, கிழக்கில் வெள்ளப் பாதிப்புக்களினால் சேதமடைந்த ஏழு பாரிய நீர்பாசன குளங்கள் இன்னமும் புனரமைக்கப்படாமல் உள்ளன. இவ்வாறு ஸ்ரீலங்கா அரசு ஆரம்ப காலத்திலிருந்தே இனவாத அடிப்படையில் பாரபட்சம் காட்டி வந்தது. இவை மட்டுமல்ல, முல்லைத் தீவு பிரதேசத்தில் விதை வெங்காயம் தருவதாகக் கூறியது. ஆனால் விதை வெங்காயம் கொடுக்கப்படாத நிலையில் வெளிநாடுகளிலிருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்ததோடு நெல்லின் விலையையும் குறைத்தது. இவ்வாறாக நீர், விதைப்பிற்கான பொருட்கள், சந்தைப்படுத்தல் போன்ற பிரச்சனைகளில் திட்டமிட்ட நெருக்குதலினால் வாடிக்கொண்டிருக்கும் உழவர்களை மறுபக்கத்தில் காணிச் சுவீகரிப்பு குடியேற்றம், சிங்களக் காடையர்களின் அட்டகாசம், ஸ்ரீலங்கா இராணுவத்தின் கொலை வெறித்தனம் ஆகியவற்றால் மென்மேலும் ஒடுக்குகிறது.

## திட்டமிட்ட குடியேற்றங்கள்

குடியேற்றம் காணிச் சுவீகரிப்பு ஆகியவை 1947 கல்லோயா விவசாய குடியேற்ற திட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டங்களிலிருந்து இன்று வரை பல வடிவங்களை எடுத்து வெகு வேகமாகவும் நுணுக்கமான திட்டங்கள் மூலமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் குடியேற்றங்கள் தமிழ் பேசும் தேசிய இனத்தின் தன்மைக்கு அச்சுறுத்தலே! இக்குடியேற்றங்களை கவனித்தால் ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கைகள் நன்கு தெளிவாகும்.

1953ம் ஆண்டு கந்தளாய் பௌத்த விகாரை ஒன்று கட்டுவதன் மூலம் ஸ்ரீலங்கா' தனது ஆக்கிரமிப்பு வேலையைத் தொடங்கியது. இவ்வாண்டிலேயே சீனி ஆலை கட்டப்பட்டு தம்பலகாமம் கந்தளாய், வட்டக்கச்சி போன்ற பகுதிகளில் 2500 சிங்கள மக்கள் வரை குடியமர்த்தப்பட்டனர். இதன் மூலம் 5600 ஏக்கர் மேட்டு நிலங்களையும், 9000 ஏக்கர் நீர்ப் பாய்ச்சல் நிலங்களையும் ஆக்கிரமித்தனர். 1980ல் அல்லையிலும் கந்தளாயிலும் புகுந்துகொண்ட அந்நியர்களால் வயல் நிலங்கள் மேலும் சூறையாடப்பட்டன. தொடர்ந்து வந்த இனக்கலவரங்களினால் பாதிக்கப்பட்டு பயத்தாலும் பீதியாலும் இடத்தை விட்டு ஓடவேண்டியதாயிற்று, இதேபோல் சேருவாவிலை என்னும் புனித பிரதேசத் திட்டத்தால் சிங்களக்குடியேற்றம் ஏற்பட்டதுடன் அது ஒரு சிங்கள தொகுதியாகவும் உருவாக்கப்பட்டது. மற்றும் கல்முனைப் பகுதியில் தீகவாபி என்னும் மற்றுமொரு புனித பிரதேசத் திட்டம் நடைமுறைபடுத்தப் பட்டதால் திராய்ஓடை, பொள்ளம் வெளி, கொக்கி காலந்து, நொய்னகாடு இடங்களிலும் நெற்பயிர் செய்யும் நிலப்பரப்புக்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. இதனால் தமிழ் பேசும் மக்களாகிய இசுலாமியர் அக்காணியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

அத்துடன் வீரமுனை சம்மாந்துறை பகுதிகளிலுள்ள விவசாயிகளிடமிருந்து பௌத்த குருமார்கள் மதவழிபாட்டுக்கு என வலுக்கட்டாயமாக நிதி வசூலிக்கின்றனர். இவை மட்டுமல்ல, கிராமங்களின் தமிழ்ப் பெயர்களும் சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டன. திருமலையில் மட்டும் 1881ம் ஆண்டில் தமிழ் பேசும் மக்களும் சிங்களவரும் முறையே 20 : 1 என்ற விகிதத்தில்' இருந்தனர். 1971ம் ஆண்டுக்கணக்கெடுப்பின் படி 2:1 என்ற விகிதத்தில் உள்ளனர். இத்தொகை தற்போது இன்னமும் கூடியுள்ளது.

**மக்கள் திரளில் முனைப்புச் சக்திகளாக உழைக்கும் பிரிவினர் விளங்குவது வெளிப்படை. எனவே உழைக்கும் சக்திகளில் ஒரு பிரிவினரான உழவர்களைப் போராட்டத்திற்கு அணி திரளச் செய்வது முற்போக்குச் சக்திகளின் கடமையாகும்.**

## இன்றைய நெருக்கடி

இவற்றோடு வடமுனையில் பிம்புலாகல சீலாங்கார பிக்கு தலைமையில் 1500 சிங்களவர் குடியேற்றப்பட்டதும் நெடுங்கேணியில் குடியிருந்த விவசாயிகளை விரட்டி அடித்துவிட்டு அதில் சிங்களவரை குடியேற்றியதும், இந்த அடிப்படையிலேயே தற்போது வடபகுதியில் 30,000 சிங்களவரைக் குடியேற்றப் போவதாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்து இருக்கிறது. இதன் மூலமே தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காண முடியும் எனவும் அத்துலத் முதலி பகிரங்க அறிவிப்புச் செய்ததையும் நாம் காணலாம். இந் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் மன்னார் மாவட்டத்தில் விவசாய கிராமங்களான பெரிய குளத்தில் 17 பேரும் செட்டிக் குளத்தில் 64 பேரும், பரப்பாங் கண்டலில் 17 பேரும் ஸ்ரீலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதேபோல் முல்லைத்தீவு மாவட்டத்தில் செம்மலை, தமுளமுனை என்ற கிராமங்களில் நெல் அறுவடைக்காகச் சென்று கொண்டிருந்த 58 பேர் கொலை செய்யப்பட்டு பயங்கரவாதிகள் என பெயர் சூட்டப்பட்டனர். இம்மாவட்டத்தில் இதே மாதிரியான கொலை வெறித்தனத்தால் 6 கிராமங்களிலிருந்து 7447 அப்பாவி விவசாயிகள் அகதி முகாமில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவ்வாறான துன்பங்களுக்கு மத்தியில் வாழும் உழவர்களை தேசிய இனப் பிரச்சனை கூர்மையடைந்திருக்கும் இவ்வேளையில் போராட்டத்திற்கான தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் நாம் வெகுஜன அமைப்பில் இவர்களை அணி திரட்டுவதோடு இதனூடாக இவர்களின் உண்மையான பிரச்சனைகளைத் தீர்க்கும் வண்ணம் வர்க்கக் கண்ணோட்டத்தில் அணுகி ஈழ விடுதலைக்கான பாதையில் ஒன்று திரட்டுவோமாக.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எல்லா அமைப்புக்களும் மக்கள் புரட்சிகர இராணுவத்துடன் இணைந்து பொது எதிரிக்கெதிராக போராட வேண்டும்.



ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராடி வரும் இலத்தீன் அமெரிக்க நாடான எல்சல்வடோர் விடுதலை அமைப்பு பாபிரண்டோ மார்ட்டி F P.L. (People Liberation Force)இன் தலைவரான Salvador Cayetano Carpio இன் பேட்டியொன்றின் பகுதிகள் கீழே தரப்படுகின்றது.

1932ம் ஆண்டில் 30,000க்கும் அதிகமான விவசாயிகளையும், பொதுமக்களையும் பலி கொண்ட எல்சல்வடோர் வரலாறு மிகக் கொடுமையானது. பசி, வறுமை, நோய்களுடன் ஜனநாயக உரிமைகள் ஏதுமில்லாதிருக்கும் அந்நாட்டு மக்கள் இன்று வரை அப்பிணியிலிருந்து விடுபடவில்லை. 14 குடும்ப ஆட்சி என வர்ணிக்கப்படும் சல்வடோர் சர்வாதிகார ஆட்சியானது காலங்காலமாகத் தொடர்ந்து தனது கொடுங்கோன்மையை விஸ்தரித்து வருகின்றது.

நாட்டின் பெரும் பகுதி நிலத்தை (67.28%) குடும்பச் சொத்தாக்கிக் கொண்டவர்களின் அதிகாரத்தை எதிர்த்துக் குரல் கொடுக்கும்போதெல்லாம் எல்சல்வடோர் மக்கள் நசுக்கப்பட்டனர். இந்த வரிசையிலே வெள்ளை மாளிகைத் திட்டத்தின் துணைகொண்டு 1932ம் ஆண்டு நாட்டின் 4% தொகையினரான மக்கள் அழித்தொழிக்கப்பட்டபோதும் மேன்மையான அம்மக்களின் உணர்வுகள் மழுங்கடிக்கப்படவில்லை.

இந்தப் பேரழிவுக்குப் பின் மக்கள் கிளர்ச்சிகள் மேலும் அங்கு வலுப்பெற்றது இதன் தொடர்பாக 1944ல் பொது வேலை நிறுத்தங்களும், பின்னர் 1960ல் Fraternidad De Mujere என்ற பெண்கள் முன்னணி ஏனைய அமைப்புக்களுடன் இணைந்து நடத்திய கிளர்ச்சி அப்போது ஆட்சியிலிருந்த Colonel Lemus ஐ பதவியிலிருந்து தூக்கியெறிந்தது. மேலும் 1967ல் நடந்த வேலை நிறுத்தத்தில் பெண்கள் உட்பட 35,000 தொழிலாளர்கள் கலந்துகொண்டனர். இவ்வாறு ஆங்காங்கே ஒவ்வொரு ஆண்டும் எதிர்ப்புக்கள் இருந்தபோதும் இது ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு அமைப்பின்கீழ் காணப்படவில்லை.

இதனை உணர்ந்த முற்போக்கு சக்திகள் மக்கள் எதிர்ப்புணர்வை ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பின்கீழ் கொண்டு வரும்முகமாக, 1970ல் FPL என்ற அமைப்பைத் தோற்றுவித்தன. 1930ம் ஆண்டு எல்சல்வடோரில் கம்யூனிசக் கட்சியை ஆரம்பிப்பதற்கு காரணமாக இருந்தவரான பாபிரண்டோ மார்ட்டியின் (இவர் அகஸ்டோ சீசர் சான்டினோவின் உதவியாளராக இருந்தவர்) பெயரிலேயே இது ஆரம்பிக்கப்பட்டது. கம்யூனிசக் கட்சியால் முன்னெடுக்கப்பட்ட கிளர்ச்சிப் போரானது எல்சல்வடோரின் யதார்த்தசூழ்நிலைக்கு ஒவ்வாதது என்பதை இச்சக்திகள் புரிந்து கொண்டன. அத்துடன் 40 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் அதன் முன்னணித் தலைவர்கள் திரைமறைவிலேயே இயங்கி வந்தனர்.

ஐக்கிய அமெரிக்கா தனது ஏவல் நாயான சி.ஐ.ஏ. உளவுக் கும்பலின் உதவியோடு பல இராணுவ ஆலோசகர்களையும் அமெரிக்காவில் பயிற்றுவிக்கப்பட்ட இராணுவ வீரர்களையும் எல்சல்வடோருக்கு அனுப்பியதோடு 1000 மில்லியன் டொலர் பண உதவியும் வழங்கியது 1978ம் ஆண்டு தொடக்கம் 1984ம் ஆண்டு வரை தொழிலாளர்கள், வவசாயிகள், பொதுமக்கள் உட்பட மொத்தம் 44,456 பேர்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் பல பெண்கள் கற்பழித்துக் கொலை செய்யப்பட்டனர். விடுதலை அமைப்புக்களின்வசம் உள்ள பகுதிகளில் 1984ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் பட்டும் 3418 பேர் அரச படைகளால் கொல்லப்பட்டனர். எனினும் விடுதலை அமைப்புக்கள் இன்று எல்சல்வடோர் நாட்டின் பல பகுதிகளை தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கும் அளவிற்கு வளர்ந்துள்ளதோடு கடந்த நான்கு வருட கால




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யுத்தத்தில் எல்சல்வடோர் அரசின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்துள்ளன.

இதனைத் தொடர்ந்து தற்போதைய ஜனாதிபதி Jose Nepoleon Duarete சடந்த ஆண்டு அக்டோபர் மாதம் எல்சல்வடோர் விடுதலை அமைப்புக்களுடன் பேச்சுத் தொடரில் ஈடுபட தீர்மானித்தார். இந்தளவிற்கு எல்சல்வடோர் அரசை ஆட்டங்காண வைத்ததற்குப் பின்னணியாக விடுதலை அமைப்புக்கள் அங்கு இணைந்து செயலாற்றியது குறிப்பிடத்தக்கது:

1980ம் ஆண்டு விடுதலை அமைப்புக்களுக்கிடையே ஏற்பட்ட உடன்பாடானது அவர்களது போராட்டத்தில் மிகவேகமான வளர்ச்சியைக் கொடுத்துள்ளதைக் காணலாம்.




## தற்போதைய கூட்டமைப்பும் அதன் எதிர்கால பலாபலன்கள் பற்றியும் தங்கள் அபிப்பிராயம் என்ன ?

கூட்டிணைப்பிற்கான முயற்சிகள் எல்சல்வடோர் மக்களின் புரட்சிகர கிளர்ச்சியின் வெற்றியைச் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்கின்றன. சில காலங்களுக்குமுன் F.P.L., NC (National Resistance), C·P. Communist Party of Elsalvador ஆகிய அமைப்புக்களுக்கிடையே நிகழ்ந்த உடன்பாடானது ஐக்கியத்திற்கான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஓர் இணைந்த அமைப்பு ஏற்படுத்த வேண்டுமென்பதை கவனத்தில் எடுத்துக் கொண்டது. இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும், எல்சல்வடோர் மக்களின் விடிவை நோக்கிய பாதையின் முன்னேற்றமுமாகும்.

இன்னும் சொல்லப்போனால் இது வெற்றியின் பைல்கல்லாக தெரிகின்றது எனலாம். வறுமை, பசி, நோய்களோடு ஜனநாயக உரிமை ஏதும் இல்லாதிருக்கும் எப்நாட்டு மக்களுக்கு இக்கூட்டு முயற்சியானது மிகப் பெரிய வெற்றியாக அமையும். இந்த உடன்பாடானது எமது முன்னோடிகள் சிந்திய இரத்தத்தின் பலனாகும். உடன்பாட்டிற்கான அவசியமானது நடைமுறையில் நிருபிக்கப்பட்டதாகும். கடந்த காலங்களில் எமது நாட்டு யதார்த்த சூழ்நிலைக்கு ஒவ்வாத தந்திரோபாயங்களை, பரீட்சித்துப் பார்ப்பதில் நடந்த முயற்சியானது மறுக்க முடியாத கொள்கையை மேன்மையான எமது மக்களுக்கு விட்டு சென்றுள்ளது. அதாவது எல்சல்வடோரானது முழுமையான மக்கட் புரட்சியினாலேயே விடுதலை பெற முடியுமென்பது தெளிவாகிறது.

இதன் அடிப்படையில், நாம் என்ன செய்கிறோம் என்பதை முழுக் கவனத்தில் எடுப்பதோடு நிலையான நடவடிக்கைகளால், எமது முழுமக்களின் ஒற்றுமைக்கான கட்டமைப்பைப் பலப்படுத்துவோம்.

இது மக்களால் நடைமுறைப் படுத்தப்பட்ட தந்திரோபாயத்தின் வெற்றியாகும். நூற்றுக் கணக்கான எமது முன்னோடிகள் சுயநலவர்க்கங்களின் நலனுக்காகத் தங்கள் இரத்தங்களைச் சிந்தியுள்ளார்கள். ஆனால் ஆளும் வர்க்கமானது மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சனைகளில் தங்கள் திறமையின்மையையும், கொடூர குணத்தையும் வெளிப்படுத்தின.

ஏகாதிபத்தியவாதிகள் தங்கள் கூட்டாளிகளுடன் சேர்ந்து தமது ஏகாதிபத்திய கொள்கையை விஸ்தரிக்கும் நிலையில் நியாயமான முடிவு எமக்குக் கிடைக்கப் போவதில்லை. ஆளும் வர்க்கம் தங்கள் நலனுக்கு அவர்களைப் பாதுகாவலர்களாக அமர்த்தியுள்ளது என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகியுள்ளது. முழு மக்களும் இணைந்த ஆயுதப் போராட்டத்தைத் தவிர வேறொன்றிலும் எமக்கு விடுதலை இல்லை. மேலும் இப்பொழுது விடுதலை அமைப்புக்கள் யாவும் மக்கள் நலனைக் காப்பதில் அதிக கவனஞ் செலுத்தத் தொடங்கிவிட்டன. அதாவது கூட்டிணைப்பானது புரட்சிகர கூட்டை ஆரம்பிப்பதற்கு முன் முயற்சி எடுத்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பல்வேறு கருத்துக்களைக் கொண்ட எல்சல்வடோர் விடுதலை அமைப்புக்களின் கூட்டிணைப்பில் சிக்கல்கள் ஏற்படாதா ?

எல்சல்வடோர் புரட்சிகர அமைப்புக்கள் வித்தியாசமான மூலக் கருத்துக்களையும் வித்தியாசமான கொள்கைகளையும் கொண்டிருந்தபோதிலும் அவை எல்லாம் வளர்ச்சியடைந்துள்ளன. அதனால் முழுமையான கூட்டிணைப்பென்பது இப்போது சொல்வதற்குக் கடினமாயிருப்பினும் எல்லா எல்லைகளிலும் அது உயிர்ப்புடையதாக இருக்க வேண்டும்.

ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயமாகச் சொல்ல முடியும். முழு மக்கள் புரட்சியிலேயே எல்சல்வடோர் மீட்சி தங்கியுள்ளது என உணர்ந்திருக்கும் அதே வேளையில் எமது கூட்டமைப்பை வலுப்படுத்தி மக்கட் படைக்கு மாற்றும்போதுதான் ஆக்கிரமிப்பையும், அநீதியையும் முறியடித்துச் செல்ல முடியும் என்பதையும் உணர வேண்டும்..

மக்களை வழிநடத்தும் புரட்சி அமைப்புக்களாகிய நாம் இணைப்பை இறுக்கமாகவும், உயர்ந்த ஸ்தானத்திற்கு, அதனை வளர்ச்சவும் இணைந்து தீர்மானிக்க வேண்டும். எமது மக்கள் ஏகாதிபத்தியத்தையும், ஆளும் வர்க்கத்தையும் நிச்சயமாக எதிர்ப்பார்கள் என்பதை நம்புவோமாயின் எமது இணைப்பிற்கான பாதையில், புரட்சிகர மக்கட் படையைக் காட்டுவதற்கான பாதையில் திருப்பத்தை ஏற்படுத்த முனையும் எந்தத் தாக்கத்தையும் நாம் வெற்றிக் கொள்ளத்தக்கவர்கள் என்பதை உணர வேண்டும்.

இணைப்பிற்கான ஆரம்பமுயற்சியானது சிதறிக் கிடக்கும் எமது மக்கள் சக்தி ஒரு கையின்கீழ் வரும் வரையும் சரியான இறுக்கமான பாதையில் செல்ல வேண்டும் என்ற தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும்.

மக்கள் புரட்சிகர அரசாங்கத்தை நிறுவதற்கான நாள் வெகு தொலைவில் இல்லையென நாம் நம்புகிறோம்..அத்துடன் எமது மக்களின் முன்னோக்கிய ஓட்டத்தைத் தடுக்க எவ்வித சக்தியாலும் முடியாது. எதுவும் எல்சல்வடோர் மக்களின் விடுதலை உணர்வைத் தடுக்க முடியாது.

அதாவது இந்த முயற்சியானது எல்சல்வடோர்போராட்ட வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை திறந்திருக்கின்றது. மக்கட் புரட்சியின் வெற்றியையும், சோசலிசத்திற்கான ஆரம்பத்தையும் இது உறுதி செய்கிறது.

## எல்சல்வடோர் விடுதலைக்காகப் போராடும் சகல அரசியல் - இராணுவ அமைப்புக்களும் இந்தக் கூட்டமைப்பில் [ National Cordinating Body - N. C. ] இணையவில்லை. அவர்களும் இணைவதற்கு வாய்ப்பளிக்கப்படுமா ?

நிச்சயமாக! நாட்டின் முழு மக்களையும் ஒன்றிணைப்பதற்காக இந்த அமைப்பு நிறுவப்பட்டதானது, மற்ற எல்லா அமைப்புக்களையும் ஒன்றிணைப்பதற்கேயாகும். உதாரணமாக உடன்படிக்கை ஒப்பந்தம் கூறுவதுபோல் எல்லா அமைப்புக்களும் மக்கட் புரட்சிகர இராணுவத்துடன் இணைந்து (People Revolutionary Force) பொது எதிரிக்கெதிராகப் போராட வேண்டும். நமது மக்களின் கோரிக்கையும் அதுவே.

மக்கள் அமைப்பின் இரண்டாவது கட்டமாக, போராட ஆயத்தமாயுள்ள மக்கட் படையில் தொழிலாளர், விவசாய, நடுத்தர மற்றும் மக்கட் தொகையின் இதர குழுக்களும் இணைந்து போராட்டத்தை முன்னெடுப்பதற்கு அழைத்துச் செல்லும். மற்றும் தேவாலய, இராணுவ உத்தியோகத்தர், நடுத்தர உற்பத்தியாளர்கள் இந்த கூட்டமைப்பு நடவடிக்கையில் பங்கு பெறலாம் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

(இப்பேட்டியானது Gramma-இல் வெளியிடப்பட்டதாகும். ) ●

---

**ஈழம்: அன்பளிப்பு தொகை :**

இந்தியாவிற்குள்

| | |
|---|---|
| தனி இதழ் | 2 ரூபாய் |
| 6 மாதம் | 12 ரூபாய் |
| ஒரு வருடம் | 20 ரூபாய் |

தொடர்பு முகவரி :

ஈழம்
த. பெ. எண் : 2356
சென்னை - 600 024.

---

அடுத்த எமது வெளியீடு!

# இந்த மண்ணும் எங்கள் நாட்களும்

## கவிதைத் தொகுதி

(மறுபதிப்பு)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆந்திர மாநிலத்தில் குடியமர்த்தப்பட்ட ஈழம் குடிபெயர்ந்தோரின் துயர் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றதென்பதற்கு சமீபத்தில் சேப்பாக்கம் வந்த மக்கள், நல்ல சான்று கின்றனர்.

ஆறு மாதங்களுக்கு முன்னல் ஆந்திர மாநிலத்தில் ராஜமுந்திரி என்ற இடத்திலுள்ள ''கோதாவரி ரப்பர் இண்டஸ்ரீஸ்'' என்ற நிறுவனத்தில் வேலே செய்வதற்காக சுமார் 40 குடும்பங்கள் அனுப்பப்பட்டன. ஆரம்பத்திலேயே இவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய வதிவிடவசதி அங்கு ஒழுங்கு செய்துதரப் படவில்லே. ''கம்பான் செருவு'' என்னும் இடத்திலுள்ள முனிசிபல் சத்திரம் ஒன்றில் அவர்கள் விடப்பட்டார்கள். இந்தப் பாழடைந்த மண்டபமான சத்திரத்திலே மலசலகூடம் என்று ஒன்றில்லே. ஆனாலும் இதற்காகப் பாவிக்கப்படும் இடத்தில் ஆயிரமாயிரம் புழுக்கள் நெளிந்தவண்ணமே இருக்கும். சுற்றுப்புற சுகாதாரக்கேடு காரணமாக இவர்களில் பலர் நோய்வாய்ப்பட்டதுடன் சிலர் இறக்கவும் நேரிட்டது.

இவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியப் படிமானத் தொகை (Allavance) ரூபா 85-50 உம் அரிசி கிலோ 57 காசுகளும் உரிய நேரத்தில் கிரமமாக வழங்கப்படவில்லே. இதனல் பரிதவித்த இம்மக்கள் பயிற்சிக்கால முடிவின் பின்னர் தீர்வு கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் வாழ்வினைத் தொடர்ந்துள்ளார்கள்.

ஆனல் ஆரம்பத்திலேயே இம்மக்கள் மீது ஒடுக்குமுறையைக் கையாண்ட இந்நிர்வாகம் பயிற்சி முடிவின் பின்னரும் மாதச் சம்பளமாக 250/- ரூபாவினைக் கொடுப்பதில் தாமதம் செய்ததோடு உள்ளூர் வேலேயாட்களுக்குக் கிரமமாக 400/- முதல் 450/- ரூபா வரையில் சம்பளம் கொடுத்து உழைப்பாளிகளுக்கிடையில் பிரிவினை வளர வழி செய்தது. முன்னர் கூறப்பட்டிருந்தபடி தனியான வீட்டு வசதிகள் செய்துதரப்படவில்லே. இதற்காக நிலம் ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும் எவ்விதமான விடு கட்டுவதற்கான அறிகுறிகளும் காணப்படவில்லே. இம்மக்களின் இந்த அவல நிலேயில் எதிர் காலத்தை உருவாக்கும் இவர்களின் பிள்ளேகளுக்கு கல்வி வசதிக்கான எந்தவிதமான ஒழுங்குகளும் செய்துதரப்படவில்லே.

இக்குறைபாடுகள் குறித்து நிர்வாகத்திடம் இவர்கள் தொடர்பு கொண்டபோது மிகவும் கேவலமாக நடத்தப்பட்டனர். இது குறித்து மாவட்ட ஆட்சித் தலேவர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், மாநில மறுவாழ்வு அலுவலகம் ஆகிய அலுவலக உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோதும் எந்தவொரு சாதகமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டனர். கடந்த 1—12—'84 அன்று நிர்வாகத்தை வலியுறுத்தி தமக்கு நிவாரணம் தரக்கேட்ட போது நிர்வாகம் அவர்களே வேலேயை விட்டு நீக்கியது. தொடர்ந்தும் ஏதோ நம்பிக்கையுடன் 2—1—'85 வரை அவர்கள் போராடினர்கள். எனினும் எதுவிதமான மனிதாபிமான செயல்முறைகளும் காணப்படாததால் 4—1—'85 அன்று சென்னே சேப்பாக்கம் மறுவாழ்வு அலுவலகத்தில் முற்றுகையிட்டனர்.



சென்னே வந்த இந்த 25 குடும்பத்தில் மொத்தம் 55 பேர்களின் அவசரத் தேவைகளே ஒழுங்கு செய்ய ''மனிதாபிமானத்தோடு'' ஈழம் குடிபெயர்ந்தோர் அமைப்புச் சங்கம்'' மேற்கொண்டது. தமிழ்நாடு ஆந்திர உயர் அதிகாரிகளுடன் பல தடவைகள் தொடர்பு கொண்டு இம்மக்களுக்கு மீண்டும் அதே நிறுவனத்தில் வேலே கிடைக்க ஆவன செய்தது. முறைப்படி கிடைக்க வேண்டிய அரசினது சலுகைகள் உடனுக்குடன் இம்மக்களுக்குக் கிடைக்க ஆவன செய்வதாக அரசு உறுதி கூறியதால் 4—2—'85 அன்று அவர்கள் மீண்டும் ஆந்திரம் திரும்பி வேலே செய்ய ஏற்பாடாயிற்று.

இம்மக்களுக்கு வழங்கப்பட்ட இடைக்காலத் தீர்வாகவே இதைக் கருதும் ''ஈழம் குடிபெயர்ந்தோர் அமைப்புச் சங்கம்'' அவசரத் தேவைகளின்போது தமது வேண்டுகோளினே மனித நேயத்தோடு செவிமடுத்துத் தமது செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் முகமாக உதவிகள் வழங்கிய OFERR, TIC, BESENT NAGAR தென்னசிய மனித உரிமைகள் நிறுவனம் மற்றும் ஆதரவளித்த அனைவருக்கும நன்றியைத் தெரிவிக்கின்றது.

# ஈழத்திலிருந்து குடிபெயர்ந்தோரின் அவலங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தோழன் தவராசா

# இழப்புகளோடு பயணங்கள் தொடர்கின்றன

இலட்சிய வேட்கையில் ஈழவர்களின் இடர் தீரவேண்டும் என்ற நோக்கத்தோடு இயக்கப் பணிகளை மேற்கொண்டவர்கள் தோழர்கள் பழம், சோ ஆகியோர்,

திருமலையில் சம்பூரைப் பிறப்பிடமாகக் கொண்ட தோழன் தவராசா (பழம்) ஈழவர் அனைவரும் இணைந்து, செயல்பட்டு ஒரு அடிப்படை மாற்றத்தின் மூலம்தான் புதிய சமுதாயத்தை மலர்விக்கலாம் என்பதில் அசையாத நம்பிக்கைக் கொண்டவன்.

அதற்கேற்ப ஈரோசின் இயக்கப் பணிகளில்— ஆரம்பகால பண்ணைத் திட்டங்களில் ஈடுபட்டு மக்களுடன் இரண்டறக் கலந்து போதிய அனுபவத்தை பெற்று தோழர்களின் வழி காட்டியாகத் திகழ்ந்தவன்.

மக்களுக்கான இயக்கப் பணிகளை மேற் கொண்டபோது இருமுறை இராணுவ வெறியர் களின் வதை முகாமில் சித்ரவதை கொடுமை களையும் மீறி மயிரிழையில் உயிர் தப்பினான்.

சமூக அநீதிகளை இளமை பருவம் தொட்டே எதிர்த்துப் போராடும் மனோ தைரியமும், கொண்ட கொள்கையில் அசையாத பிடிப்பும் கொண்டவன் தோழன் பாலச்சந்திரன் (சோ). இவன் திருமலையில் கட்டை பறிச்சானைப் பிறப்பிடமாகக் கொண்டவன்.

உயர்கல்விப் பெற்றிருந்தும் எளிய நிலையில் எல்லோருடன் சரளமாகப் பழகி மக்களின் மனதில் அழியாத இடத்தைப் பிடித்துக் கொண்டான்.

ஈரோசின் கொள்கையை ஏற்று இறுதி வரை செயல்பட்டு வந்தான்.

இவ்விருவரும் இயக்கப் பணிகளை மேற் கொண்டிருந்தபோது சிறிலங்கா அரசின் பேரினவாத இராணுவத் துப்பாக்கிக் குண்டு களுக்குக் கொடூரமான முறையில் 21—12—'84 அன்று இரையாகிப் போனார்கள்.

இந்த வீரமறவர்களின் லட்சியப் பயணத்தை மேலும் தொடர்ந்து முன்எடுத்து செல்ல உறுதி பூண்டு, வீரவணக்கத்தைச் செலுத்துகிறது ஈழப் புரட்சி அமைப்பு.

தோழன் பழம் அநீதிகளை எதிர்க்கும் வீர மறவனாக மட்டுமல்ல, ஒரு கவிஞனாகவும் இருந்தான்.

சிறிலங்கா அரசினுடைய சித்ரவதைகளின் கூடாரமான சிறைச்சாலைகளின் கொடூரத்தைச் சித்தரித்துக்காட்டியிருக்கும் கவிதை நம் நினைவை விட்டு நீங்காது.

''சாலையிலே காளை செல்லும் மந்தைபோல கடுகதியில் செல்லும் இங்கே மனிதர் கூட்டம். அரசமர நிழலினிலே அதிகப்பேரும், ஆங்காங்கே கூட்டமாக மிச்சப்பேரும், குளிப்பதற்கு குழுமி நின்று முட்டிமோதும் கூட்டமாய் நிற்பதனைக் காண்பேன் இங்கு ; பேணியுடன் சென்றிடுவேன் குளிப்பதற்கு பெரும் சிரமப்பட்டு சிலபேணி ஊற்றிக்கொள்வேன். ஓரிருநாள் அதுகூட கிடைக்காதப்போ ஒருவாறு முகம் கழுவிக் கொள்வேன்''. இவ்வாறு குளிப்பதற்குக்கூட வசதியில்லாத சிறையில் ''ஐந்து மணி ஆச்சென்றால் மணியின் ஓசை அழைக்கும் எமை வரிசைக்காக கொப்பியுடன் வந்தெண்ணி குறித்துக்கொண்டு கொடும் சிறையின் கதவுகளைப் பூட்டிக்கொள்வார்.''

பின்னர்,

''குழந்தைகள்போல் விழுந்து படுத்துக் கொள்வோம், பாட்டொன்று படியும் அண்ணர் என்று கேட்போம் பாடிடுவேன் பலபாடல் தொடர்ந்து பாடக் கேட்டிடுவார், நித்திரை யாய் போவார், நானோ மீட்டிடுவேன் நினைவு களை நீண்டநேரம் ஆனவுடன் எந்தனையும் உறக்கம்கொள்ளும் ஆயிரமாம் கனவுகளோடு உறக்கம் செல்லும்'' என்ற வரிகள் சிறைக் கைதிகளின் உணர்வை எழுப்புகிறது. இவர் களுடைய நினைவுகள் அழிவதில்லை.